திராவிடநாடு

26—10—58 | வார வெளியீடு | விலை 16 காசு

# வெள்ளம் வருமுன் அணைபோடு!

"கொஞ்சம் கொஞ்சமாய் உந்தி—நாங்கள்
கொண்டு வருகின்றோம் இந்தி!"—என்று
வஞ்சமாய் செய்கின்றார் சூழ்ச்சி—மக்காள்
மயங்காதீர் இதுநேரு ஆட்சி!—இன்று
செய்திப் படமெலாம் இந்தி!—வந்தே
மெய்சிலிர்த்திடச் செய்யுதே முந்தி—கரும்பை
மொய்த்திடும் ஈயெனக் குந்தி—தமிழை
உறிஞ்சிடப் பார்க்குதே இந்தி!—செய்தி
அஞ்சல் முகவரி இந்தி!—நாம் பணம்
அனுப்பிடும் அட்டையும் இந்தி!—மற்றும்
எஞ்சிய தந்தியும் இந்தி!—வானொலி
எங்கும் எதிலுமே இந்தி!—தமிழா!
இனியும் உனக்கேன் பொறுமை?—நீ
இப்படி இருப்பது சிறுமை!—செந்தமிழ்க்
கனிச்சுவை இருக்க, தமிழா!—இந்தி
கசக்கின்ற எட்டிதான் எதற்கு?—வலிந்து
அழையாத விருந்தென போந்து—இந்தி
அளவின்றி செய்யுதே வந்து!—வாலைக்
குழைத்துடன் வருகின்ற நாயாய்—இந்தி
கூடவே சுற்றுது பேயாய்!—தமிழ்
மாலையைப் பற்றிட இந்தி—இங்கு
மரம்பல தாண்டுது மந்தி!—தமிழ்ச்
சோலையுட் புகுந்துமே இந்தி—எங்கும்
சுற்றியே வைக்குது செந்தீ—"இந்தி
கட்டாயம் கற்றிடல் வேண்டும்—ஆண்டும்
கற்றோர் பெருகிட வேண்டும்!—இந்தி
பட்டங்கள் பெற்றிடின் கண்டு—அவர்க்குப்
பற்பல நல்வேலை உண்டு!"—என்று
மந்திரி தடவியே தொந்தி—சட்டம்
மதியின்றி தீட்டுகிறார் குந்தி!—மக்கள்
பலருக்கும் புரியாத இந்தி—ஆட்சி
மொழியாகின் பந்தாக எந்தி—நாம்
கலங்கிடச் செய்குவோம் வாரீர்!—வெள்ளம்
கரையின்றி வந்தபின் பாரில்—அணை
கட்டினாற் பயனுண்டோ கூறுவீர்!—முன்பே
தடைபோட்டு நிறுத்துவோம் சேர்வீர்!—அணை
விட்டுச் சிறைசென்ற போதும்—கொள்கை
விட்டுக்கொடுக்கோம் நாம் எப்போதும்! —மாறன்

# திட்டத்தின் வெற்றி?

Dr. பா. சரவணன்

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி அடைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என்று சென்னை மாநில பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் அண்மையில் மேலூரில் பேசியிருக்கிறார். அமைச்சர்களும், காங்கிரஸ் இயக்கத் தலைவர்களும் மற்றவர்களும் போற்றிப் புகழ்ந்திடும் திட்டம்பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் அனைவருக்கும் உண்டு. திட்டத்தின் வெற்றி சமுதாயத்தின் வெற்றி! திட்டத்தின் வெற்றி எங்கே? எந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு வெற்றி? என்பதை, புள்ளி விவரங்கள், திட்டங்கள்; தெளிவாக எடுத்துக் கூறும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கெனச் சர்க்கார் துறையில் வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் செலவுத் தொகைகள்:—

| | இனம் | | செலவுத் தொகை | |
|---|---|---|---|---|
| 1. | விவசாயம், சமுதாயம் அபிவிருத்தி | ரூ. | 568 | கோடி |
| 2. | நீர்ப்பாசனம், மின்சாரம் | ரூ. | 913 | ,, |
| 3. | தொழில் வளர்ச்சி | ரூ. | 890 | ,, |
| 4. | போக்குவரத்து | ரூ. | 1385 | ,, |
| 5. | சமூக சேவை | ரூ. | 945 | ,, |
| 6. | வேறு பல திட்டங்கள் | ரூ. | 99 | ,, |
| | | | 4800 | |

இனவாரியாகத் தென்னக மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள திட்டங்கள், அவைகளுக்குரிய செலவுத் தொகைகள்:—

இலட்சங்கள்

| இனம் | ஆந்திரம் | சென்னை | கேரளம் | மைசூர் |
|---|---|---|---|---|
| 1. விவசாயம், சமுதாயம் | 2564·22 | 3535·50 | 1070·09 | 1393·51 |
| 2. நீர்ப்பாசனம், மின்சாரம் | 5330·40 | 7125·00 | 2802·40 | 3791·25 |
| 3. தொழில் வளர்ச்சி | 950·80 | 1520·00 | 625·10 | 684·50 |
| 4. போக்கு வரத்து | 546·71 | 807·50 | 317·30 | 475·00 |
| 5. சமூக சேவை | 2181·76 | 4065·95 | 1967·17 | 1666·05 |
| 6. வேறுபல திட்டங்கள் | 323·07 | 252·10 | 413·25 | 50·94 |
| மொத்தம் | 11896·96 | 17306·05 | 7195·31 | 8061·25 |

திட்டக்குழுவினர்: வெளியிட்டுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட விளக்க நூலில் 620வது பக்கத்திலிருந்து 643 பக்கம் வரையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் "முதலீடு—பங்கீடு" என்பதில் விளக்கங்கள் காணலாம்.

தென்னக மொழி மாநிலங்களுக்குப் பங்கீடு முறையால் கிடைத்திடும் தொகை:

| | | |
|---|---|---|
| ஆந்திரம் | 11896·96 | இலட்சம் |
| சென்னை | 17306·05 | ,, |
| கேரளம் | 7195·31 | ,, |
| மைசூர் | 8061·25 | ,, |
| மொத்தம் | 44459·57 | |

திட்டத்தில் செலவிடப்படும் தொகை ரூ. 4800 கோடி. தென்னகத்திற்கு ரூ. 44459·57 இலட்சம்.

இந்திய அரசியலார் திட்டங்கள் வகுத்து செலவுக்கென ஒதுக்கியுள்ள தொகை ரூ. 2560 கோடி திட்டங்களில் இரும்பு எஃகு உருக்கு ஆலைகள் துவக்குவது, இருக்கும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவது.

மூன்று ஆலைகள்:— ரூர்கலா 128 கோடி; பிலாய் (மத்திய பிரதேசம்) ரூ. 110 கோடி; துர்க்காபூர் (மேற்கு வங்கம்) ரூ. 115 கோடி என ஒதுக்கப்பட்டுள்ளது. தென்னகத்தில் மைசூர் மாநிலத்தில் உள்ள மைசூர் இரும்பு எஃகு தொழிற்சாலை வளர்ச்சிக்கு ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இரும்பு எஃகுத் தொழிற்சாலை அமைபபுத் திட்டங்களால் பயன் ஏற்படுவது எங்கே? சமுதாயத்தின் வெற்றி எங்கே? வருங்காலத்தில் இரும்பு எஃகு பொருள்களை விற்பனை செய்யப்போவது வடநாடு, அவைகளை வாங்கும்

(14-ம் பக்கம் பார்க்க)

# ஓட்டும் வேட்டும்

[மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [26—10—58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 15


தளபதி நகீப் என்பார் பரூக் மன்னனை வெளியேற்றிவிட்டு எகிப்தில் புது அரசு மலரச் செய்தார், —பிரான்சு நாட்டில் தளபதி டிகாலே ஆட்சியின் பொறுப்பேற்றார்—பர்மியப் பிரதமர் யூநூ, இராணுவத் தளபதியைக் கூப்பிட்டு ஆளச் சொல்லியிருக்கிறார், தான் விலகிக்கொண்டு—இப்போது பாகிஸ்தான் தலைவர் மிர்சா தளபதி அயூப்கானை அழைத்து நாடு உன் பொறுப்பில் என்று விட்டுவிட்டார்—இந்தோனேஷியத் தலைவர் சுகர்ணோவும் இப்படிச் செய்யக்கூடுமோ என்கிற பேச்சு அடிபட ஆரம்பித்திருக்கிறது.

மன்னராட்சிமுறியடிக்கப்பட இராணுவம்அழைக்கப்பட்டது எகிப்தில்— அரசியல் குழப்பங்களுக்கு முடிவு ஏற்பட டிகாலேயைத் தவிர வேறு ஆளில்லை என்று எண்ணிற்று பிரான்ஸ்—பொதுத் தேர்தலை நடத்தப் பொறுப்பான அரசு இராணுவ அரசுதான் என்கிறார் யூநூ—இலஞ்சமும் ஊழலும், அரசியல் வேட்டையும் மிகுந்துபோய் விட்டது பாகிஸ்தானில், அயூப்கானைத் தவிர வேறு வழி தென்படவில்லை, என்கிறார் மிர்சா.

தொடர்ந்து நடந்துவரும் இந்த நிகழ்ச்சிகள் உலக அரங்கில் பரபரப்பை உண்டுபண்ணியுள்ளன. "இந்தியாவுக்கும் அக்கதிதானா?'' என்று கேட்கப்படுகிறது. "இன்றுள்ள காங்கிரஸ் ஆட்சியின் போக்கு நீடித்து, நேருவுக்குப் பிறகு தக்க தலைமையில்லாமல் போகுமானால், என்ன நேரும்? இப்போது பல நாடுகளில் நடைபெற்றுள்ளதுபோல இங்கும் ஒரு இராணுவக் கிளர்ச்சி நடக்குமானால் அதன் விளைவுகள் எப்படியிருக்கும்?'', என்று கேள்விகளை எழுப்பி, பதிலும் அளிக்கப்படுகிறது.

எகிப்து,பிரான்சு,பர்மா,பாகிஸ்தான்,தாய்லாந்து போன்ற இடங்களிலாவது, இராணுவத்தினர் என்றால் ஒரேநாட்டினர் ஒரே மதத்தவர் என்கிற ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. பலதரப்பட்ட இனத்தவர்களைக் கொண்ட இந்த உபகண்டத்திலுள்ள இராணுவத்தில் 'பலரும்' உள்ளார்கள். சீக்கியர்—மராட்டியர்—வங்காளிகள்—பீகாரிகள்—தமிழர்கள்—மலையாளிகள் கன்னடியர்—தெலுங்கர், இப்படி 'பற்பலர்' இருக்கிறார்கள். நாளைக்கு ஒரு இராணுவ தர்பார் ஏற்படுமானால்! இவர்கள் ஒவ்வொருவரும், தனித்தனியாகக் கிளர்ச்சி செய்தால்!—விளைவு, எப்படியிருக்கும் என்பதை மனக் கண்ணால்கூட, நினைக்க முடியவில்லை. எனினும், இப்படியேற்படவே முடியாது என்று, இன்றுள்ள உலகில், உறுதி கூறும் நிலையும் இல்லை.

பிற நாடுகளின் படையெடுப்பிலிருந்தும், உள்நாட்டில் போலீசால் முடியாதபோதும் அழைக்கப்படக் கூடியதாகவும், கருதப்பட்டது இராணுவம். ஆனால், இன்று, அந்த இராணுவம் வைத்ததே சட்டம் என்கிற ஒரு புதுநிலை உண்டாகி வருகிறது. இராணுவ ஆட்சி சுமத்தப்பட்டுள்ள நாடுகளைப் பற்றியும், அங்கு இந்நிலைமை ஏற்பட்டதற்கான காரணங்களைப் பற்றியும் பலதரப்பட்ட விளக்கங்கள் தரக்கூடும். எனினும், ஜனநாயக விரும்பிகள் மனம், நிச்சயம் சஞ்சலம் கொள்ளவே செய்யும்.

சரியோ, தவறோ, ஒரு நாட்டின் எதிர்கால அரசியலை நிர்மாணிக்கும் பொறுப்பு, அந்த நாட்டு மக்கள் வசம்தான் விடப்படவேண்டும். அதற்குள்ள ஒரு வழி, ஒரு தேர்தலை நடாத்தி, அதன்மூலம் பலமாக வரும் கட்சியின் வசம், ஆளும் பொறுப்பை அளித்தல் வேண்டும். அதற்குப் பதில், "எல்லாக் கட்சிகளுமே மோசம், நான் ஒருவன்தான் யோக்கியன்", என்று சொல்லிக்கொண்டு, ஒருவன் தேவைக்கே ஒரு தேசம் என்கிற நிலை மலருவது, 'இட்லர்'பாதையாகும். இந்த நிலைமையினை, அறிந்தோ, அறியாமலோ, "காங்கிரசே, ஏக கட்சி'' என்று சொல்லி வளர்த்து வருகிறார்கள் காங்கிரஸ் தலைவர்கள்! இந்த "ஏகபோக'' உரிமை என்றும் ஆபத்து. இது சர்வாதிகாரத்தில்தான் கொண்டு போய் விடும். நல்லதோ, கெட்டதோ அதைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மக்கள் மன்றத்திடம்தான் இருக்கவேண்டும். ஒருவர் உத்தமராயிருக்கலாம் — புதிய புத்தராகக்கூடக் கருதப்படலாம்-எனினும்: அவர்விருப்பத்திற்கு மாறாக, மக்கள் இன்னொரு கட்சியை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்துவார்களானால், அதன் பலனை

தேர்ந்தெடுத்த மக்கள் அனுபவித்து, அடுத்த முறை அத்தவறைச் செய்யாமல் தவிர்ப்பதுதான் ஜனநாயகம். இந்த ஜனநாயக யுகத்தில், நெப்போலியனுக்கும் இடமில்லை, சீசருக்கும் இடமில்லை, "மக்கள் தம் ஓட்டுச் சீட்டு"க்குத்தான் இடமிருக்கிறது. எகிப்தின் விஷயத்தில், மன்னன் அட்டகாசம் ஒழிய வேண்டுமென்பதிலும், மக்கள் குரலுக்கு மதிப்பு உண்டாக வேண்டுமென்பதிலும், பொதுமக்கள் மத்தியிலேயே பொங்கிக்கொண்டிருந்தது குமுறல். நகீப் வந்தார். அவர்போலத் தளபதி நாசர் வந்தார். அந்நிலைமைக்கும் ஏனைய நாடுகளில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கும் நிரம்ப வேற்றுமையுண்டு. மன்னனா! மக்களா!!—என்பது எகிப்துப் பிரச்னை. இந்த நாடுகளிலோ மக்களா! இராணுவமா!! என்கிற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஓட்டுச் சீட்டுகள் ஆட்சி நடத்த வேண்டிய பொன்யுகம் இது. வேட்டுச் சப்தம் வெடிக்கும், கபர்தார்! — என்று கர்ச்சிப்பது, முறையுமல்ல; நெறியுமல்ல. ஏகபோக உரிமையும், என் ஒருவனுக்குத்தான் நாட்டின் வளர்ச்சியில் அக்கறையுண்டு எனப் பேசி ஏனையோரையெல்லாம் தேசத்துரோகிகளாக்குவதும், அந்த வினாடிக்கு ஆனந்தமாகயிருக்கலாமே ஒழிய, மனித உலகம் விரும்பும் எதிர்காலத்துக்குச் சற்றும் பலனளிக்காது.

இந்தியத் துணைகண்டத்தில், நேரு அவர்கள் ஒரு ஜனநாயக வாதியாக விளங்குகிறார் — பெரும்பாலும். பம்பாய்—தமிழ்நாடு—மராட்டியம் — கூர்ஜரம் என்று இப்படி, அவரவர்கள் பிரச்னை வருகிறபோது மட்டும், எரிச்சலுக்கு இடங்கொடுத்து, ஜனநாயகத்தைச் 'சற்றே விலகியிரு!' என்று சொல்லிவிடுகிறார். இது, 'இந்தியா ஒன்றாயிருக்க வேண்டும்' என்கிற அவருடைய ஆசையால் ஏற்படும் ஆத்திரமாகும். இது தவிர்த்து, பிறவற்றில் அவர் ஒரு உண்மையான ஜனநாயக வாதியாகவே தோன்றுகிறார்! அவரளவுக்கு ஓரளவு ஒத்துப் போகும் நபர், காங்கிரஸ் மேலிடத்தில் உண்டா எனின் சந்தேகம்தான். அவருக்குப் பிறகு, முரட்டுச் சுபாவம் படைத்த ஒருவரோ, ஆத்திரப் புத்திகொண்ட ஒருவரோ, அந்த இடத்துக்குவந்து உரிமை கோருவோர் குரல் அதிகமாக ஒலிக்க ஆரம்பித்து, அதன் விளைவாக ஒரு தகராறு உருவாகுமானல், விளைவு மிகமிக விபரீதமாகவே நேரும்.

அதனல்தான் ஆச்சாரியார் பலமுள்ள எதிர்க்கட்சி வேண்டும் என்கிறார்—அந்த எதிர்க்கட்சிகளுக்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் அளித்து, வேட்டு அல்லது ஓட்டுத்தான் நாடாளும் என்கிற உன்னத நிலையை உருவாக்கும் பொறுப்பு, இந்தத் தலைமுறையிலுள்ள தலைவர்கள் வசம் இருக்கிறது

ஆனல், அண்மையில் நிறுவப்பட்டுள்ள 'இராணு
அரசுகள்' அச்சத்தை அதிகமாக்குகின்றன. அந்
அச்சத்தைத் துடைக்கும் வகையில், நேரு போன்
வர்கள், இப்போதுமுதல் மக்கள் குரலுக்கு மதி
பளித்து, ஜனநாயகத்தின் பெருமையை நிலைநாட்
வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள சகல எதிர்க்கட்
களும் 'தமிழ்நாடு' என்று பெயர்வைக்கவேண்
மென்கிறனவா—மராட்டியர், தனி மாநிலம் கோ
கின்றனரா—சரி, யோசிப்போம், என்று எண்ண
வேண்டும். ஒரேயடியாக, 'இவர்கள் கையில்தா
இந்தியா இருக்கப்போகிறது' என்றெண்ணி, பே
வதும், ஆடுவதும் கூடாது.

நாட்டில் ஏற்படும் பலவகைப்பட்ட அதிருப்
களும் குமுறல்களும் ஆட்சியில் இருப்போரை நி
கலங்கச் செய்வதன் காரணமாக இராணுவப் புரட்
ஏற்பட்டு அரசாங்கத்தைக் கைப்பற்றும் நிலை உ
டாகிறது. சில நாடுகளில் முறையில் சிற்சில மா
தல்கள் உண்டென்றாலும், பொதுவாக இராணு
ஆட்சி ஏற்படுவது இதனல்தான் என்பதை எவரு
மறுக்க முடியாது. ஆனல் ஜனநாயக நாடுகளில்கூ
இராணுவ ஆட்சி ஏற்படுகிறதே என்றால், அ
ஜனநாயகம், அந்த நாட்டில் சரியானபடி பின்பற்
படவில்லை என்பதையே காட்டுவதாகும். ஜனநாய
வாதிகள் என்று தங்களைக் கூறிக்கொண்டு சர்வா
காரப்போக்கில் நடந்துகொள்ளும் மோசமான நி
ஏற்படும்போது மக்களின் அதிருப்தியும் குமுறலு
உண்டாகின்றன. அந்த நேரத்தில் பலம்பொருந்தி
இராணுவம், மக்கள்பால் மனமிரங்குவதாகக் காட்
கொண்டு அரசைக் கைப்பற்றும் வாய்ப்பை
பெற்றுவிடுகிறது. அதற்கேற்ப மக்களுக்கு மறுக்
பட்ட—மறைக்கப்பட்ட சில உரிமைகளை அதாவ
தேவைகளைச்செயல்படுத்தித்தன்பக்கம் ஆதரவை
தேடிக்கொள்கிறது.

ஆனல், இப்படிப்பட்ட ஆட்சிமுறை நாட்டுக்
உகந்ததுதானா? தேவைதானா என்பதையே இ
றுள்ள அரசியல் மேதைகள் சிந்திக்கிறார்கள்.

ஜனநாயகப் பண்பு மலர, ஒவ்வொருவர் கை
லும் பொறுப்பு இருக்கிறது. அந்த உன்னத
பாடு, சிறக்க, பாடுபடவேண்டும் ஒவ்வொருவ
இல்லையெனில், வல்லான் வகுத்ததேவழி! துப்பா
யால் நன்றாகச் சுடக்கூடியவனே முதல் மந்திரி!! எ
கிற சூழ்நிலை ஏற்படத் துவங்கும். இது நல்லதல்
உலகில் தோன்றும் இந்தப் பயங்கரக் குறிகளு
விரைவில் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு,
தந்த நாடுகளிலும் ஜனநாயக மணம் கமழுமெ
நம்புவோமாக.

★

# சி.என்.ஏ.
# அமெரிக்கப்
# பத்திரிகை
# நிருபர்
# சந்திப்பு

★

எம். எஸ். வெங்கடாசலம்
தொகுத்தது.

9—10—58 அன்று காலை 11-மணியளவில், "சிகாகோ டெய்லி டைம்ஸ்" (Chicago Daily Times) இதழின் நிருபர், பிரீடன்பர்க் (Friedenberg) என்பார், சி. என். ஏ. அவர்களை அவரது இல்லத்தில் கண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி, கொள்கை, கோட்பாடுகள் பற்றிப் பற்பல விபரங்களைக் கேட்டறிந்து சென்றார். அந்தப் பேட்டியின் முழுவிவரமும் இங்கே தரப்பட்டிருக்கிறது:-

[❋]

நிருபர்:- நீங்கள் தானே சட்ட மன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்?

சி. என். ஏ:- இல்லை! எதிர்க்கட்சித் தலைவர் வி. கே. இராமசாமி (முதலியார்) பல சுயேச்சையாளர்களைக் கொண்ட கூட்டு அமைப்பின் தலைவர் அவர்!

நிருபர்:- தி. மு. க.வைச் சார்ந்த உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் எத்தனைபேர் இருக்கிறார்கள்?

சி. என். ஏ:- 15 பேர்!

நிருபர்:- அப்படியானால் நீங்கள் தான் பலமான எதிர்க்கட்சி...! தி. மு. க.வின் வரலாற்றைச் சுருக்கமாக எனக்கு விளக்க இயலுமா?

சி. என். ஏ:- 10 ஆண்டுகளுக்கு முன்னால் திராவிட கழகம்தான் இருந்தது--திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. இப்போது தி. மு. க.வில் உள்ள பலர் தி. க.வில் இருந்தோம். தி. மு. க. துவங்கிய பிறகு ஏராளமானவர்கள் புதிதாகக் கட்சியில் சேர்ந்திருக்கிறார்கள். எங்களுக்கும் தி. க. வுக்குமிடையே இருக்கின்ற முக்கிய வேறுபாடு தி. க. ஜனநாயகக் கோட்பாட்டையோ நடைமுறையையோ, ஏற்றுக் கொள்வதில்லை---நாங்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றோம்.

நிருபர்:- நீங்கள் தி. க. வில் உறுப்பினராக இருந்திருக்கிறீர்களா?

சி. என். ஏ:- பொதுச்செயலாளராகவே இருந்திருக்கிறேன்.

நிருபர்:- 'திராவிடநாடு' கோரிக்கையை முதலில் துவங்கியது யார்? துவங்கப்பட்டு எவ்வளவு நாட்கள் ஆகின்றன?

சி.என்.ஏ:- தி.க.தான்! கோரிக்கை ஆரம்பித்து நீண்ட நாட்கள் ஆகின்றன. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னாலிருந்தே திராவிடநாடு விடுதலை பெற வேண்டும் என்று கோரியிருக்கிறோம். சுருக்கமாகச் சொன்னால் பாகிஸ்தான் கேட்கப்படுவதற்குமுன்பே நாங்கள் திராவிட நாடு கேட்டிருக்கிறோம்.

நிருபர்:- இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் காங்கிரஸ் பலம் வாய்ந்த இயக்கமாக இருந்தது. அப்போதே நீங்கள் திராவிட நாடு கேட்கவேண்டிய காரணம் என்ன?

சி. என். ஏ:- வெள்ளையர்களை விரட்டக் காங்கிரஸ் பாடுபட்டதாலே அதற்குப் பலம்வந்ததே தவிர வேறல்ல! எனவே காங்கிரசின் பலம் திராவிடநாடு கோரிக்கைக்கு எதிராகத் திரட்டப்பட்டது அல்ல! இன்னும் சொல்லப்போனால் திராவிட கழகத்தின் தலைவர் பெரியார் அவர்களே காங்கிரசில் இருந்தவர்தான்!

நிருபர்:- தி. மு. கழகம் ஏன் துவக்கப்பட்டது.

சி. என். ஏ:- தி. கழகத்துக்கு ஜனநாயகக் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் நம்பிக்கையில்லை. கட்சி அமைப்பிலும், அரசியல் அமைப்பிலும் அது ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது. எங்களுக்கும் அவர்களுக்குமிடையே இருக்கின்ற மற்றொரு முக்கிய வேறுபாடு, ஜாதிப் பிரச்சினையைப் பொறுத்தது. அவர்கள் பார்ப்பனர்களை அடியோடு அழித்தாகவேண்டும், அல்லது அவர்களை இந்த நாட்டைவிட்டே துரத்தவேண்டும் என்கிறார்கள். நாங்கள் அந்தக் கருத்தை ஏற்கவில்லை-- பார்ப்பனீயம்தான் அழிக்கப்பட வேண்டும் என்கிறோம். நாங்கள் ஈடுபடுகிற எந்தக் காரியத்திலும், அமைதியான முறைகளில் நம்பிக்கை வைத்தே பணியாற்றுகிறோம்,

**நிருபர்:-** கடந்த தேர்தலில் திராவிட கழகம் போட்டியிட்டதா?

**சி. என். ஏ:-** போட்டியிடவில்லை! காங்கிரசுக்கு ஆதரவு தந்தது. "நாங்கள் காங்கிரசை வெறுக்கிறோம். ஆனால் காமராசர் நல்லவர் — பார்ப்பனரல்லாதாரின் தலைவர்" என்று காரணம் காட்டி, காங்கிரசுக்கு ஆதரவாகப் பணிபுரிந்தது.

**நிருபர்:-** அப்படியானால் காமராஜ் தி. க.வின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுகிறாரா?

**சி. என். ஏ:-** அதுதான் இல்லை. திராவிட கழகத்திடமிருந்து எவ்வளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடியுமோ, அவ்வளவையும் பெற்றுக்கொள்ளுகிறார், அவ்வளவுதான்!

**நிருபர்:-** தி. க. "தமிழ்நாடு" கோரிக்கையை எவ்வளவு நாளாக எழுப்பி வருகிறது?

**சி. என். ஏ:-** ஏறக்குறைய ஆறு மாதங்களாக!

**நிருபர்:-** தி. மு. க.வின் கிளைகள் தமிழ்நாடு தவிர மற்ற மூன்று மாநிலங்களிலும் இருக்கின்றனவா?

**சி. என். ஏ:-** ஆம்! கேரளத்திலும், மைசூர் மாநிலத்திலும் ஓரளவு இருந்துவருகின்றன. ஆந்திரத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டு எல்லைக்கு அருகில் உள்ள பகுதிகளில் கிளைகள் இருக்கின்றன.

**நிருபர்:-** நீங்கள்தான் கட்சியின் தலைவரா?

**சி. என். ஏ:-** இல்லை! கட்சியில் மூத்தவனாகக்கருதப்படுகிறேன். பொதுச்செயலாளர், நெடுஞ்செழியன்.

**நிருபர்:-** தி. மு. க.விற்கு எந்த வகுப்பாரிடம் நிறையச் செல்வாக்கு இருக்கிறது? தொழிலாளர்களிடமா, படித்தவர்களிடமா?

**சி. என். ஏ:-** எல்லா வகுப்பாரிடமும் செல்வாக்கு இருக்கிறது.

**நிருபர்:-** கட்சியில் இப்போது எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்? முழுநேர உழைப்பாளிகள் எத்தனை பேர், மற்றவர்கள் எத்தனை பேர்?

**சி. என். ஏ:-** ஏறத்தாழ 2 இலட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். முழுநேர உழைப்பாளிகள் என்றும் மற்றவர்கள் என்றும் நாங்கள் பாகுபாடு செய்வதில்லை.

**இராமன்:-** ஆளும் கட்சியாக இருந்தால் அதிலுள்ள சிலர் முழுநேர உழைப்பாளர்களாக இல்லாமலிருக்கலாம்! ஆனால் எதிர்க்கட்சியில் அப்படியல்லவே!

**நிருபர்:-** உங்கள் கட்சிக்கென்று பத்திரிகைகள் இருக்கின்றனவா?

**இராமன்:-** "நம் நாடு" என்றொரு தினத்தாள் இருக்கிறது. அது கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகை. வார இதழ்கள் இருக்கின்றன—'ஹோம்லண்ட்' என்ற ஒரு ஆங்கில இதழும் இருக்கிறது!

**நிருபர்:-** ஆங்கில இதழின் ஆசிரியர் யார்?

**சி. என். ஏ:-** நான்தான்.

**நிருபர்:-** நீங்கள் (சி. என். ஏ.வைப் பார்த்து) காங்கிரசில் இருந்திருக்கிறீர்களா?

**சி. என். ஏ:-** இல்லை! ஆனால் காங்கிரசில் இருந்த பலர் இப்போது தி. மு. க.வில் இருக்கிறார்கள். உதாரணமாக, கட்சியின் துணைப் பொதுச்செயலாளராக இருக்கும் தோழர் என். வி. நடராசன் காங்கிரசில் இருந்தவர்.

**நிருபர்:-** பண்டித நேரு மிகவும் செல்வாக்கு உள்ள தலைவராக இருக்கிறார். அவர் இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லி வருகிறார். சென்னைக்கு வந்தபோது கூட, நாட்டுப் பிரிவினையைக் கோருகிற பெரியாரைக் காரசாரமாகத் தாக்கினார். மேலும், இந்திய அரசியலமைப்பு, பிரிவினைக்கு இடந்தரவில்லை. சமுதாய நலத்திட்டம்போன்ற திட்டங்கள் வேறு நிறைவேற்றப் படுகின்றன. இவைகள் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டால், உங்கள் கோரிக்கைக்கு ஆதரவு மங்காதா?

**இராமன்:-** பொருளாதார முன்னேற்றம் விடுதலை உணர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக என்றும் இருந்ததில்லை. அப்படி இருந்திருக்குமானால்: இன்று இந்தியா சுதந்திரம் பெற்றிருக்க முடியாது. ஆங்கிலேயர்கள்தான் இரயிலையும், ஆகாய விமானத்தையும், மற்றும் பல முன்னேற்றச் சாதனங்களையும் இந்த நாட்டிற்கு அறிமுகம் செய்தவர்கள். அந்த முன்னேற்றங்கள் விடுதலை உணர்ச்சிக்குப் பாதகமாக அமையவில்லையே!

**சி. என். ஏ:-** அதுமட்டுமல்ல! பண்டித நேரு மனநிலைகட்கு ஆட்பட்டவர் (Man of Moods) இந்தியா சுதந்திரம் பெற்றுப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, அதன் பகுதிகளுக்கு சுயநிர்ணய உரிமை (Self-determination) தரப்படவேண்டும் என்று அவர் கூறியிருப்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. அவருடைய செல்வாக்கு விடுதலை வேட்கைக்கு இடையூறாக இருக்கக்கூடுமானால், பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டிருக்காதே!

உங்கள் கேள்விக்கு வேறு வகையில்கூடப்பதிலளிக்க முடியும். நேருவை நாங்கள் ஒரு ஜனநாயகவாதி என்று கருதுகிறோம். சட்ட மன்றத்தில் திராவிடநாடு கோரித் தீர்மானம் நிறைவேற்றினால் நேரு அந்தத் தீர்மானத்திற்கு மதிப்பளித்து, பிரிவினையை ஏற்றுக் கொள்வார் என்று கருதுகிறோம்.

**நிருபர்:-** ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத தலைவர்கள் வடக்கே ஆட்சிக்கு வந்துவிட்டால்?

**சி. என். ஏ:-** இங்கு அதற்குத் தகுந்தபடி முறைகள் மாறிவிடும். வேறு சில கட்சிகள் புதிய முறையில் வேலைசெய்ய முனையக்கூடும்.

**நிருபர்:-** உங்கள் கட்சி துவங்கப்பட்டு 9-ஆண்டுகள்தான் ஆகின்றன என்கிறீர்கள், அதற்குள் சட்ட மன்றத்தில் 15-இடங்களைக் கைப்பற்றி இருக்கிறீர்கள். அடுத்த தேர்தலில், உங்கள் கட்சிக்கு எத்தனை இடங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்.

**சி. என். ஏ:-** சென்னை சட்ட மன்றத்தில் இப்போது இருப்

பதைப்போல் குறைந்தது மூன்று மடங்கு இடங்களையாவது கைப்பற்றக்கூடுமென்று நினைக்கிறேன். ஆனால் மற்ற மாநிலங்களைப் பொறுத்த வரையில் அதிக இடங்களுக்குப் போட்டியிட முடியும் என்று நான் நம்பவில்லை.

நிருபர்:- உங்கள் திராவிட நாட்டில் அரசியலமைப்பு எப்படிப்பட்டதாக இருக்கும்? சமுதாய அமைப்பு எப்படி இருக்கும்?

சி. என். ஏ:- அரசியலமைப்பு ஜனநாயகமாகவும், சமுதாய அமைப்பு சாதி பேதங்களற்ற சமதர்ம அமைப்பாகவும் இருக்கும்.

நிருபர்:- இப்போது டில்லியில் இருப்பதைப்போல் அப்போதும் மத்திய பாராளுமன்றம் ஒன்று இருக்குமல்லவா?

சி. என். ஏ:- இருக்கும்! ஆனால் மாநிலங்கள் தம் நிறைவு (autonomy) பெற்றனவாய், விரும்பினால் பிரிந்து போகும் உரிமையும் தரப்பட்டு இருக்கும்.

நிருபர்:- திராவிடம் பொருளாதார பலம் வாய்ந்ததாக இருக்க முடியுமா?

சி. என். ஏ:- நிச்சயமாக முடியும்.

நிருபர்:- பெரிய பெரிய ஆலைகள் எல்லாம் வட இந்தியாவில் இருக்கின்றன. இங்கே தொழில் வளர்ச்சி மிகவும் குறைவு. அப்படியிருக்க, திராவிடத்தில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு என்ன செய்வீர்கள்?

சி. என். ஏ:- இங்கே இருக்கின்ற மூலப் பொருள்களே தொழில் வளத்தைப் பெருக்குவதற்குப் போதுமானவை.

நிருபர்:- இந்தியா பெரியதாக இருப்பதால் வெளிநாட்டு உதவி ஏராளமாகக் கிடைக்கிறது. திராவிடநாடு அந்த அளவு வெளிநாட்டு உதவியை எதிர்பார்க்க முடியாதே!

சி. என். ஏ:- வெளிநாட்டு உதவி நமக்கு வலிவு ஊட்டுவதாக இருக்கிறதா, அல்லது பளுவாக ஆகிறதா என்பதைப் பொறுத்துத்தான், வெளிநாட்டு உதவியின் இலாப நஷ்டங்களைக் கணக்கிட்டாக வேண்டும்.

நிருபர்:- அப்படியானால் வெளிநாட்டு உதவி பளுவாகத்தான் அமையும் என்கிறீர்களா?

சி. என். ஏ:- அப்படித்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. அது அந்த உதவி எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. இந்திய அரசாங்கம் உதவியைப் பயன்படுத்துகிற முறையில் உதவிகள் உண்மையிலேயே பளுவாக அமைகின்றன.

நிருபர்:- எப்படி?

சி. என். ஏ:- அரசாங்கம் எதை முதலில் செய்யவேண்டுமோ அதை முதலில் செய்யவில்லை. மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கு முன், கனரக ஆலைகளில் பணத்தை முடக்கியிருக்க வேண்டியதில்லை.

நிருபர்:- "அடிப்படைத் தேவைகள்" என்று எதை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?

சி. என். ஏ:- உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் தான்.

நிருபர்:- திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்படும் விவசாய அபிவிருத்தியைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

சி. என். ஏ:- விளை நிலங்களின் பரப்பை விரிவாக்குவதிலேயே கவனம் செலுத்தப் படுகிறதே தவிர, விஞ்ஞான சாதனங்களைப் பயன்படுத்துவதில் அரசாங்கத்தின் கவனம் அவ்வளவாகச் செல்லவில்லை.

நிருபர்:- மக்களின் வாங்கும் சக்தி குறைவாக இருக்கும்போது, அன்றாட உபயோகத்திற்கான பொருள்களைப் (Consumer goods) பெருக்குவதால், எப்படிப் பலன் கிடைக்கும்?

சி. என். ஏ:- தொழில் வளர்ச்சியின் மூலமாக வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட முடியும். தொழில் வளர்ச்சியும், அன்றாடத்தேவைக்கான பொருட் பெருக்கமும் ஒன்றோடொன்று தொடர்பு படுத்திப் பார்க்கவேண்டியவையே தவிர, — தனித்தனியாகக் கவனம் செலுத்துவதில் பொருளில்லை.

இராமன்:- (நிருபரைப் பார்த்து) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

நிருபர்:- அது தவறான முறையில் தீட்டப்பட்டிருக்கும் திட்டம் (Misplan) என்று கருதுகிறேன்.

சி. என். ஏ:- (நிருபரிடம்) புதிய புதிய நீர்ப்பாசனத் திட்டங்களில் ஏராளமான பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆண்டுதோறும் பல கிராமங்களும் நகரங்களும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகின்றன. வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள் முதலில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

நிருபர்:- திராவிடநாட்டில் எந்த மொழி ஆட்சி மொழியாக இருக்கும்.

சி. என். ஏ:- மாநிலங்களுக்குள் அந்தப்பகுதி மொழியும், மாநிலங்களுக்கிடையேயும் வெளியிலும், தொடர்பு கொள்ளுவதற்கு ஆங்கிலமும் பயன்படுத்தப்படும்.

நிருபர்:- இந்தியைப்பரப்புவதற்கு அரசியல் அதிகாரம் பயன்படுத்தப்படுகிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா?

சி. என். ஏ:- அரசியல் அதிகாரம் பயன்படுத்தப்படுவது மட்டுமல்ல! மற்றும் பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. இந்திப் பள்ளிகளுக்கு அரசாங்கத்தின் நிதி உதவி மிகத் தாராளமாகக் கிடைக்கிறது. உத்தியோக உயர்வு பெறுவதற்கு இந்தி தெரிந்திருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இந்திப் பண்டிதர்களுக்கு ஊதியச் சலுகை கொடுக்கப்படுகிறது.

அரசியல் அமைப்பில் 1965-க்குள் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி பயன்படுத்தப் படவேண்டும் என்று இருக்கிறது! ஆனால் தென்னாடு முழுவதும் இந்த ஏற்பாட்டை எதிர்க்கிறது.

நிருபர்:- இந்த மாநில சர்க்கார் இதைப்பற்றி எந்தக் கருத்தையும் அறிவிக்கவில்லையா?

சி. என். ஏ:- அச்சம் கலந்த எதிர்ப்பை இந்த அரசாங்கம்

வெளியிட்டிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசித்தார்கள். முடிவில், காலம் குறிப்பிடாமல், ஆங்கிலம் இன்னும் நீண்ட காலத்துக்கு ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஒப்பந்தத்திற்குக்கூட மத்திய அரசாங்கம் இணங்குமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது.

**நிருபர்:-** அதுசரி! நீங்கள் திராவிட நாடு கேட்க வேண்டிய தேவை என்ன?

**சி. என். ஏ:-** மனிதனுக்கு இயற்கையாக எழுகின்ற உரிமை உணர்ச்சி. நாங்கள் பல நூற்றாண்டுகளாகத் தனித்து வாழ்ந்தவர்கள். எங்கள் முன்னோர்கள் பெயரோடும் புகழோடும் வாழ்ந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் இங்கே வந்து, தங்கள் நிர்வாக சௌகரியத்திற்காக ஒரு 'போலி ஒற்றுமை' ஏற்படுத்துவதற்கு முன்னால், திராவிடம் என்றுமே வடநாட்டோடு இணைந்து இருந்ததில்லை.

அது மட்டுமல்ல! இணைந்து இருப்பதால் வடநாடு எங்கள் மீது அரசியல், பொருளாதாரம் கலாச்சாரம்ஆகியபலவற்றிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. இந்த ஆதிக்கத்தை நாங்கள் வெறுக்கிறோம்.

**நிருபர்:-** பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் இந்தியாவில் இருந்திருக்கின்றனவே!

**சி. என். ஏ:-** எல்லாம் விந்தியத்திற்கு வடக்கேதான்! தமிழகத்தின் மீது படையெடுத்து எந்த வடநாட்டு அரசனும் இங்கே ஆட்சியை அமைக்க முடியவில்லை.

**இராமன்:-** சாம்ராஜ்யங்களுள் பெரியது ஔரங்கசீப் சாம்ராஜ்யம். ஆனால் ஔரங்கசீப்கூட தென்னாட்டைக் கைப்பற்ற முடியவில்லை.

**நிருபர்:-** தென்னிந்தியாவை 'திராவிடம்' என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படியானால் வடக்கே திராவிடர்களே இல்லை என்று கருதுகிறீர்களா?

**சி. என். ஏ:-** சிலர் அங்கேபோய்க் குடியேறி இருந்திருக்கலாம்.

**நிருபர்:-** வடநாடு உங்கள்மீது அரசியல் துறையிலும் பொருளியல் துறையிலும் ஆதிக்கம் செலுத்துகிறது என்று நீங்கள் சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் கலாசாரத் துறையில் எப்படி ஆதிக்கம் செலுத்துகிறது என்பது எனக்குப் புரியவில்லை.

**சி. என். ஏ:-** கொஞ்சம் கொஞ்சமாக வடநாட்டு நாகரிகமும் பழக்க வழக்கங்களும் இங்கே நுழைகின்றன. உதாரணமாக 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்னால் கோதுமை சாப்பிடும் பழக்கம் மிகவும் அரிதாக இருந்தது. இப்போது கோதுமை உணவு ஓரளவு பெருகிவிட்டது. (உரையாடலின் போது நிருபர் "அச்சா" "அச்சா" என்று சொல்லிவந்ததைக் குறிப்பிட்டு) வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிற நீங்களே "அச்சா" என்ற இந்தி வார்த்தையை அடிக்கடி உபயோகப்படுத்துகிறீர்கள்.

**நிருபர்:-** அதிலென்ன தவறு?

**சி. என். ஏ:-** தவறென்று நான் சொல்லவில்லை. ஆனால் உங்களைப் போன்றவர்களின் கண்களுக்கு இந்திமொழிதான் தெரிகிறதேயொழிய, எங்கள் மொழி தெரிவதில்லை.

**நிருபர்:-** நான் இங்கே வந்து ஐந்து நாட்கள்தான் ஆகின்றன.

**சி. என். ஏ:-** ஆண்டாண்டு காலமாக இங்கே இருக்கிற வடநாட்டுக்காரர்கள் திராவிட மொழிகளைத் தெரிந்துகொள்வதில் அக்கறை காட்டுவது இல்லை. உதாரணத்திற்கு, சென்னையில் சௌகார்பேட்டை என்று ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தீர்களானால், பம்பாயின் ஒரு பகுதியில் இருப்பதைப்போன்ற உணர்வுதான் உங்களுக்குத் தோன்றும். அங்கிருக்கிற கடைகளெல்லாம் வடநாட்டுக்காரர்களுடையவை. அங்கிருக்கிற கூலிகளெல்லாம் வடநாட்டுக்காரர்கள் — சலவைத் தொழிலாளிகளும்கூட வடநாட்டைச் சேர்ந்தவர்கள். அதனால் அவர்களுக்கு இந்த நாட்டு மொழியை அறிந்துகொள்ள வேண்டுமென்ற அக்கறை இருப்பதில்லை.

**நிருபர்:-** என்னுடைய தந்தை ரஷ்யாவைச் சேர்ந்தவர்—தாய் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். அவர்களுக்கிடையே தொடர்பு ஏற்பட முடிந்தது. அத்தகைய தொடர்புகள் இங்கே ஏற்படுவதில்லையா? அத்தகைய தொடர்புகளுக்கு இந்தியா ஒன்றாக இருப்பது சாதகமானதல்லவா?

**சி. என். ஏ:-** எனக்குத் தெரிந்த அத்தகைய ஒரே தொடர்பு இராஜாஜியின் மகளுக்கும், காந்தியின் மகனுக்கும் நடந்த திருமணம்தான்.

நீங்கள் சொல்லுகிற வகையில் பற்பல தொடர்புகள் ஏற்பட்டாலும் இங்கிலாந்து இங்கிலாந்தாகத்தான் இருக்கிறது—பிரான்சு பிரான்சாகத்தான் இருக்கிறது—இணைந்து விடவில்லை.

மேலும் திருமணம் மனத்தைப் பொறுத்ததே தவிர, மண்ணைப் பொறுத்ததல்ல!

எனவே இந்த வாதம் பிரிவினை வாதத்துக்குப் பதிலோ மறுப்போ ஆகாது.

**நிருபர்:-** திராவிடநாடு பிரிக்கப்பட்டால் இப்போது திட்டங்களின் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் பயன் கிடைக்கா தல்லவா?

**இராமன்:-** திட்டங்களின் மூலம் எங்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய தொகை கிடைக்கவில்லை—நாங்கள் வஞ்சிக்கப்படுகிறோம். தென்னாட்டின் மக்கள் தொகை, மொத்த மக்கள் தொகையில் ஏறக்குறைய 25%. ஆனால், இரண்டாவது திட்டத்தில், எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மொத்தத்தொகையில் 11% தான்!

**நிருபர்:-** தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் மத்திய அமைச்சரவையில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

**இராமன்:-** 3 பேர். சென்னையைச் சேர்ந்த எஸ். வி. இராமசாமி— ஆந்திராவைச்சேர்ந்த கோபா

ரெட்டி—மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த கே. சி. ரெட்டி. ஆனால் இவர்களில் இருவர் 'காபினெட் தகுதி' பெற்றவரல்ல!

நிருபர்:- இங்கே திறமை வாய்ந்தவர்கள் இல்லையோ?

இராமன்:- அது தவறு! ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், டாக்டர் சுப்பராயன், மாநில முதலமைச்சராகவும், வெளிநாட்டுத் தூதுவராகவும் இருந்தவர். இப்போது அவர் பாராளுமன்ற உறுப்பினராக மட்டுமே இருக்கிறார்.

சி. என். ஏ:- (நிருபரைப் பார்த்து) உங்கள் கேள்விக்கு நான் வேறு விதமாகக்கூடப் பதில் சொல்வேன். தென்னாட்டில் திறமை வாய்ந்தவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு வடநாட்டுத் தலைவர்களிடம் சிக்கியிருப்பது, எங்கள் பிரிவினைக் கோரிக்கைக்கு நல்ல காரணமாக அமைகிறதல்லவா?

நிருபர்:- டாக்டர் சுப்பராயனுக்கு அமைச்சர் பதவி ஏன் கொடுக்கப்படவில்லை என்று கருதுகிறீர்கள்?

இராமன்:- இந்தியை ஆட்சிமொழியாக ஆக்குவதைப்பற்றிஆராய கேர் கமிஷன் என்றொரு குழுவை அரசாங்கம் அமைத்தது. அந்தக் குழுவில் டாக்டர் சுப்பராயனும் இடம் பெற்றிருந்தார். அந்தக் குழுவின் அறிக்கையில் சுப்பராயன் மாறுபட்ட கருத்தைத் (Minute of Dissent) தெரிவித்தார். அதனால் அமைச்சர் பதவி கிடைக்காமல் போயிருக்கக்கூடும்.

நிருபர்:- ஆட்சிமொழிப் பிரச்சினை எந்த முறையில் தீர்வு காணப்பட வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்.

சி. என். ஏ:- மத்திய ஆட்சிமொழியாகவும், மாநிலங்கிடையே தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவும், வெளிநாட்டுடன் தொடர்பு கொள்ளவும் ஆங்கிலம்தான் பயன்படுத்தப்பட வேண்டும். இந்தி பேசப்படுகிற மாநிலங்களில் அது ஆட்சிமொழியாக இருக்கலாம்--மற்றப்பகுதிகளில் அல்ல!

நிருபர்:- மத்திய மாநில அதிகார வரம்புகளில் நீங்கள் மாற்றம் காண விரும்புகிறீர்களா?

சி. என். ஏ:- பிரிவினை விஷயத்தில் நாங்கள் விட்டுக்கொடுப்பதாக இல்லை. எங்களுக்கு வேண்டியது சுதந்திரம் — சிற்சில அதிகார வரம்பு மாற்றங்களல்ல! மாநிலங்கள் பிரிந்து போகும் உரிமை அரசியல் அமைப்பின் மூலம் வழங்கப்பட்டால், அந்த மாற்றத்தை நாங்கள் வரவேற்போம்.

நிருபர்:- கொஞ்ச நாட்களுக்கு முன் சென்னையில் ஜன சங்கக் கட்சி துவங்கப்பட்டது. அந்தக் கட்சியும் வளர்ந்தால் உங்கள் கோரிக்கைக்கு இடையூறு ஏற்படாதா?

சி. என். ஏ:- ஜன சங்கம் இங்கே தழைக்கவே முடியாது.

இராமன்:- ' இந்துஸ்தானத்தை ' அமைப்பதுதான் ஜனசங்கத்தின் திட்டம். மதத்தையும் அரசியலையும் அந்தக் கட்சி வேறுபடுத்திடவே விரும்பவில்லை.

நிருபர்:- ஜன சங்கம் புராணத்தை அடிப்படையாகக் கொண்டது. புராண காலம் பொற்காலம் என்றுகூறி வருகிறது. மற்றும் இஸ்லாமிய எதிர்ப்புக் கொள்கையைஅதுகைவிட்டுவிட்டது. மதத்தையும் அரசியலையும் ஒன்றாக்கத்தான் பாடுபட்டு வருகிறது. அப்படியிருக்க அதற்கு ஏன் ஆதரவு கிடைக்காது என்று கருதுகிறீர்கள்?

சி. என். ஏ:- மதத்தையும் அரசியலையும் ஒன்றாக்கிய பிறகு இந்து தர்மம்தான் நாட்டை ஆளும். அப்போது இஸ்லாமிய எதிர்ப்புணர்ச்சி ஏற்படாமலா போகும்?

நிருபர்:- இந்து தர்மத்தின் வழியில் நாடு ஆளப்படுவதை நீங்கள் ஏற்கவில்லையா?

சி. என். ஏ:- இல்லை.

நிருபர்:- அப்படியானால் நீங்கள் இந்துக்களல்லவா?

சி. என். ஏ:- அல்ல! திராவிடர்கள்! நால் வருணத்தை ஏற்றுக் கொள்பவர்கள் இந்துக்கள். திராவிட கலாசாரம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

நிருபர்:- திராவிடர்கள் ஜாதிகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், சாதிகள் இங்கே எப்படி வந்தன?

சி. என். ஏ:- கிருமிகள் நோயைச் சுமந்து செல்வதில்லையா! அதைப்போல, இங்கே வந்து குடியேறியவர்கள் இந்த நோயைக் கொண்டுவந்து விட்டார்கள்!

நிருபர்:- (சி.என்.ஏ.யைப் பார்த்து) நீங்கள் எந்தஜாதியைச் சேர்ந்தவர்கள்?

இராமன்:- "எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்?" என்று கேளுங்கள்—பதில் தருகிறோம்.

சி. என். ஏ:- நாங்களெல்லோரும் திராவிடர்கள். குடி மதிப்புப் பதிவுகளிலும் திராவிடர்கள் என்றுதான் குறிப்பிடுகின்றோம் —ஜாதியைக் குறிப்பதில்லை.

நிருபர்:- வடநாடு, — தென்னாடு என்று எந்த அடிப்படையில் பாகுபாடு செய்கிறீர்கள்?

சி. என். ஏ:- இனவாயிலாக ஏற்படுகின்ற கலாச்சார அடிப்படையில்!

நிருபர்:- நீங்கள் "ஒரு கடவுள்" இருக்கிறதென்று நம்புகிறீர்களா?

இராமன்:- "ஒரு கடவுள்" என்று ஏன் சொல்லுகிறீர்கள்?

(11-ம் பக்கம் பார்க்க)

## கற்றல்

வாசித்தல் என்பது எழுத்து வடிவில் கண்ணுக்குக் காணும் பொருளை நாவால் ஒலித்தல் என்று மட்டுமே பொருள்படும். பலர் தாம் என்ன வாசிக்கிறோம் என்பதை அறியாமல் வாசிக்கிறார்கள். கண் காண்பதை நா ஒலிக்கிறதேயன்றி உள்ளம் அதில் ஈடுபடுவதில்லை. வேறு சிலர் வாசிப்பதை மனத்தில் படியவைத்துக் கொள்கிறார்கள். இது படித்தல் ஆகும். வாசித்தலை விட இது ஒருபடி மேலாயினும், இதில் மனத்தின் நினைவாற்றல் மட்டுமே செயலாற்றுகின்றது. நூலிலுள்ளதை உள்ளத்தில் கொள்வதன்றிச் சிந்தனைக்கு இடமில்லை. கற்றல் என்பது வாசித்து, படித்துச் சிந்தித்து மனத்தில் புதுக் கருத்துக்களை உருவாக்குவதாகும்.

# முத்துக்களும், முட்களும்

—[இரெ. தென்னவமணி]—

முத்துக்கள் என்றாலே நம் மூதாதையர்களின் வரலாறுகள் வெளிப்படுகின்றன. எகிப்து, ரோமாபுரி போன்ற நாடுகளில் கடல் வாணிபம் செய்த காட்சிகள் நினைவுக்கு வருகின்றன. இவற்றால் ஏற்படும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிந்தனையைச் சிறிது உயர்த்தினால் முத்துக்களின் தூய்மை, ஏழைகளின் வாழ்வை வளமாக்கும் குணம், அணிபவர் அழகை எடுத்துக் காட்டும் இயல்பு, மதிப்பு முதலியவை தெரிய வரும். இதனால் தான் அறிஞர்களின் சொற்களை, அரசியல் மேதைகளின் வாசகங்களை, ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை புலவர்களின் கவிதைகளை முத்துக்கள் என மக்கள் போற்றுகின்றனர்.

முட்கள் வழியைக் கடக்க தடையாகின்றன, பட்ட இடத்தில் புண் ஏற்படுத்துகின்றன. பார்ப்பவர் வெறுப்பபோடு, எடுத்தெறிய நேரிடுகின்றது. இக்காரணங்களால் நாட்டுக்குத் தீமை விளைவிக்கும் சொற்களையும், மனதைப் புண்படுத்தும் வார்த்தைகளையும் எத்தகையவர் கூறினாலும் முட்களெனக் கூறுதல் குற்றமாகாது.

ஆட்சியில் அமர்ந்திருப்பவர்கள முத்துக்களை உதிர்த்தால் அங்கு வாழும் மக்களின் துயரைத் துடைக்க உதவும். நாட்டின் வளத்தைப் பெருக்க வழி செய்யும். முட்களைக் கொட்டினால் வறுமையை நீக்கத் தடையாகும்; வளம் காண வழி செய்யாது.

உலகத்திற்கு முப்பாலாய், எக்காலத்திற்கும் ஏற்றதாய் நீதி முறைகளை வகுத்துத்தந்து இணையிலாக் கவிஞராய்த் திகழ்கிறார் வள்ளுவர். சர்வாதிகாரிகளின் ஆட்சியைப் பேனா முனையால் ஓட்டினர் வால்டேர், ரூஸ்ஸோ போன்றவர்கள். அரசியல் மாளிகையின் அடிக்கல்லை அசைத்தனர் அரிஸ்டாடில், பிளாட்டோ போன்ற அரசியல் மேதைகள். எதையும் ஏன்? எதற்காக என்ற வினாக்களை எழுப்பிச் சிந்தியுங்கள் என்று அறிவுப பிரச்சாரம் செய்தார் கிரேக்கப் பெரியார் சாக்ரட்டீஸ். சுயநல வாதிகளின் சூதாட்டத்திற்கு இரையாகி அவர்களின் கரங்களிலே கருகிய துருக்கியை மீட்டார் கமால்பாட்சா. ஷெல்லியும், ஷேக்ஸ்பியரும் செதுக்கிய சொற்கள் செங்கரும்பைவிட இனிக்கின்றன.

இப்பேரறிஞர்களின் முத்து நிகர் கருத்துக்கள் அடிமையை அகற்றவும், அரசியலில் புது மலர்ச்சி தோன்றவும் வழி செய்தன, "உன்னையே நீ புனிதமாக்குக்கொள்" என்ற ஏசு, நபி, புத்தர் போன்றவர்களின் அறிவுரைகள்சமுதாயத்தில்மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. இவர்களின் கருத்துக்கள் பரவவும், மக்கள் ஏற்கவும் ஓயாத பிரச்சாரங்களும் ஓதுகின்ற ஏடுகளும்தான்காரணம் என்பதை உலகறியும்.

ஆனால் இன்று பெயரளவிலே வெளிவரும் ஏடுகளில் பலவும், பிரச்சாரங்களில்பலவும் கொள்கைகளை விளக்கவோ, இலட்சியங்களை எடுத்துரைக்கவோ, குறிக்கோள்களை நிலைநாட்டவோ கூடியதாய் இல்லை, 'யாரைப்பற்றித் தலைப்புத் தந்தால் ஏடுகள் விலையாகும்', 'யாரைப்பற்றிப் பேசினால் கூட்டம் கூடும்' என்ற குருட்டு நம்பிக்கையிலேவெற்றியையும்மனத்திருப்தியையும் பெறவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. "நல்லாவின் பாலிலே நஞ்சைக் கலப்பதைப் போல" நாடாள்வோரில் சிலர் முன்பு முத்துக்களை உதிர்த்தவர்கள் இன்று முட்களைக் கொட்டுகின்றனர். "எரியும் நெருப்பில் எண்ணெயை வார்ப்பது போல," "வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல", வறுமையில்வாடிடும் மக்களின் பொறுமையைச் சோதிக்கின்றனர்.

ஆங்கிலேயரிடமிருந்து இந்திய துணைக் கண்டத்தின் சாவியை கையில் வாங்கிய ஜவஹர், "ஒருவன் ஒருதுளி இரத்தம் சிந்தினாலும் நாம் பெற்றது சுதந்திரமாகாது" என்றார். ஆனால் சிங்களத்தில் செந்தமிழர் சிந்திய இரத்தத்தைக்கண்டு அனுதாபம் தெரிவிக்கக்கூட மனமில்லாதவராய் "அதைப்பற்றி வாதிடுவது வெளிநாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகும்" எனக் கூறுகிறார். தொழிலாளிகளின்தொல்லைகளைப் போக்குங்கள், நீக்குங்கள் என்று கூறினால் 'பல குரல்கள் ஒலிக்கும் இடங்களில் படைகளை ஏவுங்கள்' எனச் சொல்லாமல் சொல்கிறார்; மக்களைக் கொல்லாமல் கொல்கிறார்.

"திராவிடர்கள் தொன்மையான நாகரிகமும் அறிவாற்றலும் உடையவர்கள்" என்ற முத்துக்களை உதிர்த்த ஆசியாவின்சோதி, அத்திருவாயையே திறந்து "நான் சென்ஸ்" "காட்டுமிராண்டிகள்" என்ற முட்களையும் கொட்டுகிறார்.

'இராமாயணம் என்றால்என்ன?' என்ற மகள் இந்திராவின் வினாவுக்கு சிறையிலிருந்த தந்தை, இராமாயணம் என்பது ஆரியருக்கும் திராவிடருக்கும் இடையே ஏற்பட்ட பூசல் என்று ஆராய்ந்து கூறியவர்,மறவர்குலத் தலைவனும் இராவணனைத் தீயிலிட்டுப் பெருமைப்படும் வடவரின் கோர விழாவைக் கண்டு களித்து "இது அல்லவோ சிறந்த விழா" என்று புகழ்பாடுகிறார். மன்னரின் ஆட்சிக்கும், சர்வாதிகாரப் போக்கிற்கும் முடிவுகட்டிய ஈராக், லெபனான் போன்ற நாடுகளுக்கு ஆதரவளிக்கும் இந்தியாவின்முதல்வர், பார்மோசா, குமாய் தீவுகள் செஞ்சீனாவுக்கு உரியவை என்று அவர்களின் உரிமையைப் பாதுகாக்கும் காவலர், "சிறிய நாடுகளின் சுதந்திரத்தில் வேற்று நாடுகள் தலையிடக் கூடாது என்ற மாணிக்க வாசகங்களை உதிர்க்கின்றவர், "தென்னகம் திராவிடர்க்கு உரியது—விடுதலை தாருங்கள்" என்

னால் "நாட்டைப் பிரிப்பது கேட்டை விளைவிக்கும்" என ஆரூடம் கணிக்கிறார். இதையெல்லாம் காணும் பொதுமக்கள் முத்துக்களைச் சிந்திய செவ்வாய் ஏனோ முட்களையும் கொட்டுகின்றது என்று கேட்காமலில்லை.

எதிர் வீட்டுக்காரன் ஒரு அடி கொடுத்தால் அடுத்த வீட்டுக்காரன் ஆறடி கொடுப்பதுபோல நம் தாயகத்து அமைச்சர்களும், அதிபதிகளும் பேசும் மேடைகளிலெல்லாம் அர்ச்சிக்கும் முட்கள் ஏராளம்! நம்மைப் பார்த்து, இவர்களெல்லாம் மனிதர்கள் தானா? என்று ஆச்சரியத்தோடு கேட்கிறார் காங்கிரஸ் கட்சியின் தலைவர். 'புரியாதவர்கள்' 'அறியாதவர்கள்', 'துரோகிகள்' என்று பூசிக்கின்றனர் அமைச்சர்கள். இம்முட்கள் மேனியைத் துளைத்தாலும் நாம் "எதையும் தாங்கும் இதயத்தைப்" பெற்றதால் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மக்கள் மன்றம் ஏற்காது என்பதை மறந்துவிடாதீர்கள் என்று ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்கிறோம். முட்கள் வேண்டாம்! முத்துக்கள்தான் வேண்டும் என்று மக்கள் கூறும் நாளும், முட்களைத் தரும் செடிகளை அறுத்தெறியும் நாளும் ஒன்று உண்டு என்பதையும் கூறிக்கொள்கிறோம்.

★

## பழக்கம்

குழந்தைக்கு ஒவ்வொரு பழக்கம் உண்டாவதற்கும் ஒவ்வொரு பருவம் உண்டு. அந்த அந்தப் பருவம் வந்த பிறகு தாய் சற்று உதவி செய்தால் போதும். ஒரு தொல்லையும் இல்லாமல் அதற்கு அந்தப் பழக்கம் தானாகவே வந்துவிடும். இப்படியில்லாமல், உரிய பருவம் வருவதற்கு முன்பு எந்தப் பழக்கத்தைக் குழந்தைக்கு ஏற்படுத்த முயன்றாலும், குறிப்பிட்ட பழக்கமும் சரியாக உண்டாகாது, மேற்கொண்டு தீங்கும் விளையும். வற்புறுத்தி ஒரு பழக்கத்தை உண்டாக்க முயல்வதால் குழந்தைக்குச் சிடுசிடுப்பு, வீண் பிடிவாதம், பெற்றோர்மீது வெறுப்பு முதலிய பல மனக்கோளாறுகள் ஏற்படும். இதனால் பிற்காலத்தில் குழந்தையின் வாழ்க்கையே கெட்டுவிடும்.

9-ம் பக்கத் தொடர்ச்சி

சி. என். ஏ:- நமது கருத்துக்கு எட்டாத ஒரு "பெரிய சக்தி" (Supreme Power) இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்கிறோம்.

நிருபர்:- வடநாட்டில் உள்ள கடவுள்களுக்கும் தென்னாட்டில் உள்ள கடவுள்களுக்கும் பெயரில் ஒற்றுமை காணப்படுகிறதே!

இராமன்:- திராவிடர்கள் இயற்கைச் சக்திகளை வணங்கி வந்தார்களே தவிர — வயிறு பெருத்த கடவுளையும், மற்றும் பல தெய்வங்களையும் அல்ல! இந்தக் கடவுள்களெல்லாம் புராண காலத்தில் வடஇந்தியாவில் உற்பத்தி ஆனவை; மெள்ள மெள்ளத் திராவிடத்திற்குள் நுழைந்திருக்கின்றன.

சி. என். ஏ:- இதிகாச புராணங்கள் எதுவும் தமிழில் எழுதப்படவில்லை—எல்லாம் சமஸ்கிருதத்தில்தான். இதை நாங்கள் எடுத்துச் சொல்லும்போது இதிகாசக் கடவுள்களெல்லாம் வடக்கேயிருந்து இங்கே இறக்குமதியானவை என்பதை மக்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

நிருபர்:- பைபிள் ஆங்கிலத்தில் வெளியிடப்படவேண்டுமென்று ஆங்கிலேயர் போராடியதைப் போல், தமிழர்கள் போராடுவதில்லையா?

சி. என். ஏ:- கிறிஸ்து மதத்தை ஏற்றுக் கொண்டபிறகு ஆங்கிலேயர் அத்தகைய போராட்டம் நடத்தினார்கள். நாங்கள்தான் வர்ணாஸ்ரம தர்மத்தையே ஏற்கவில்லையே!

நிருபர்:- திராவிடத்தின் "பொற்காலமாக" எதைக் கருதுகிறீர்கள்.

இராமன்:- மூவேந்தர்கள் ஆண்ட காலத்தை. அப்போது செங்கோலாட்சி நடைபெற்றது — நாடு செழிப்புற்றுத் திகழ்ந்தது.

சி. என். ஏ:- பழைய தமிழ் இலக்கியங்களில் பற்பல புலவர்களின் பெயர்களும், மன்னர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பெயர்களில் ஒன்றிலாவது ஜாதியைக் குறிப்பிட எந்தச் சொல்லும் இல்லை. ஆனால் வடநாட்டுப் புலவர்களின் பெயர்களில் ஜாதி அடைமொழிகள் இருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால் "ஜாதி"யைக் குறிப்பதற்கு நேரான சொல் தமிழில் இல்லை. "ஜ" என்னும் ஒலிகூடத் தமிழ் மொழியில் இல்லை. எனவே சாதிகள் திராவிடத்தில் இறக்குமதியானவை என்பது தெளிவாக விளங்குகிறது.

"பண்டிட்" "முன்ஷி," "ஜோஷி" என்னும் பல அடைமொழிகள் ஜாதியைக் குறிப்பவை.

எங்கள் தனித்திராவிடத்தில் சாதியற்ற சமுதாயம் அமைத்துக்கொள்ள முடியும்—வடநாட்டோடு இணைந்து இருந்தால் அது அவ்வளவு எளிதானதல்ல!

நிருபர்:- எனவே வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் எந்தவிதத்திலும் ஒற்றுமை இல்லை—இருக்க முடியாது என்கிறீர்கள்!

சி. என். ஏ:- ஆம்!

நிருபர்:- கம்யூனிஸ்டுகளுக்கும் உங்களுக்கும் நெருங்கிய உறவு இருக்கிறதா?

இராமன்:- அவர்கள் அகில இந்தியவாதிகளோடு உறவு கொள்ளுகிறார்களே தவிர, எங்களோடு இல்லை, அமிர்தசரஸ் மாநாட்டில்கூட தி. மு. க.வைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்!

சி. என். ஏ:- எங்கள் கழகப் பொதுச்செயலாளர் தேர்தலில் தோற்றதற்கு, கம்யூனிஸ்டுகளும் ஒரு காரணம்! இதிலிருந்து எங்கள் உறவை நீங்கள் புரிந்துகொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

[கடைசியாக நிருபர், பேட்டி அளித்ததற்கு சி. என். ஏ.-க்கு நன்றி செலுத்திவிட்டு, "ஹோம்லண்ட்" இதழ்கள் சிலவற்றைப் பெற்றுக் கொண்டு சென்றார்.]

★

# உதிர்ந்த நட்சத்திரம்

—"அன்பு"—

அன்றைய கடமைகளை உலகுக்குஉணர்த்தக்காலையில் தோன்றிய கதிரவன் மாலை வந்ததும் தன் கடமையை முடித்துக் கொண்டு அடிவானில் மறைந்தான். பகலின் கடைசிப் பகுதிக்குப் பின்பும், இரவின் முதற் பகுதிக்கு முன்பும் இடைப்பட்டிருக்கும் அந்த ஒளி பொருந்திய நேரத்தை என்ன என்று சொல்வது! கதிரவன் 'என் மறைவின் சாயல்தான் அத்தகைய ஒளி' என்று சொல்லாமல் சொல்லுகிறான். வரப்போகும் வெண்ணிலவோ "நான் தோன்றப் போவதன் அறிகுறிதான் அந்த ஒருவகை ஒளிக்குறி" என்று கூறுகிறது. தன் நீல ஆடைக்குள் சூரியனை மறைத்துக்கொண்ட அகண்டவானமோ அந்த இடைப்பட்ட நேரத்தின் ஒளி என்னுடைய நிறத்தால் உண்டாவதுதான் என்கிறது.

இப்படிப்பட்ட அந்த மகத்தான இடைவெளிநேர ஒளிக்குப்பிறகுதான் கதிரவனைத் தந்த நீலவான் தண்ணொளி பெருக்கும் வெண்ணிலவையும் இவ்வுலகுக்கு அளித்தது. நீலநிறத் தட்டில் ஊற்றப்பட்ட தங்கக்குழம்புபோல, மங்கையர் வதனத்துத் திலகம் போல வெண்ணிலவு உலாவரத் தொடங்கியது. அதன் வரவால்தான் இப்பூவுலகு எத்துணை பூரிப்பும் புத்தெழிலும்பெறுகிறது! முள்ளையும் மலராக்கும் அந்நிலவொளியின் மகத்துவம்தான் என்னே!

களங்கமில்லா முழுமதி என்கிறார்கள். அதன் வட்டவடிவ முகத்தில் களங்கமா இல்லை? இருக்கிறதே! அக்களங்கம் எவ்வாறு தோன்றியிருக்கமுடியும்? தலைவன் தலைவியின் முழுமதி போன்ற முகத்தருகே வந்து அன்புடன் உற்று நோக்கும் போது 'நோயை'க் கொடுப்பதும் நோய்க்கு மருந்து ஆகும் தன்மையதுமான அவளது இரு நீலக் கருவிழிகளில், அவனது உருவம் பட்டு எதிரொளி தருகிறதே, அது அவளது புதுக் கண்ணாடி போன்ற முகத்திற்கு ஒரு 'களங்கம்'தானே! அத்தகைய களங்கம்தான் நிலாப் பெண்ணாள் வெண்மை முகத்தில் தெரிவதும்! இப்பூவுலகாகிய காதலனது பிம்பம்தான் அந்நிலாப் பெண்ணாளது பளிங்கு முகத்தில் தெரிவதும்!

அப்பப்ப! நிலவுக்குத்தான் எத்தனை இலட்சம் தோழிகள்! தோழிகள் என்றால் இப்படியன்றோ இருக்கவேண்டும்! நிலவுக்கேற்ற தோழிகள். அவள் பவனிவரத் தொடங்கியதும் கூடவே அவைகளும் 'மினுக் மினுக்' என்ற ஒளியுடன் தோன்றிவிடுகின்றனவே! அவைகளுக்குள்ளேதான் எத்தனை எத்தனை கூட்டங்கள், பிரிவுகள்! அத்துணையும் பற்பல தோற்றங்களோடல்லவோ மிளிர்கின்றன!

ஆனால் அந்த ஒரே ஒரு நட்சத்திரம் மட்டும்...ஆம்...அதுமட்டும் ஏன் அப்படி வாய்விட்டுச் சிரிக்கிறது? அதை, வாய்விட்டுப் பொறாமைச் சிரிப்புச் சிரிக்கிறதென்றுகொள்வதா, அல்லது கண்சிமிட்டிக் கோபக் கனலை அள்ளித் தெளிக்கிறது என்று கூறுவதா? இன்று மட்டும் அதன் தோற்றத்திலேஓர் தனித்தன்மை; அதன் கண்ணசைப்பிலே ஓர் பொறாமையின் அறிகுறி! எதன் பாலும் பொறாமை கொண்டவர்கள் நிலைத்து நின்றதில்லையே. இந்நட்சத்திரமும் அப்படிப்போய் விடுமோ?

அதோ அது நிலவை நோக்கிப் பொறாமையினால் ஏதேதோ பேசுவது கேட்கிறதே:

"பதினைந்து நாட்களுக்கு ஓர் முறை முழுமையாகத் தோன்றும் உன்னைவிட நான் எவ்வகையில் தாழ்ந்தவள்? போயும் போயும் உன்னைப் புகழ்கிறார்களே! என்றும் முழு உருவத்தைக் கொடுக்காத உனக்கு எத்தனை பெயர்கள்? வெண்ணிலவு,...தண்ணிலவு,...முழுமதி,...சந்திரன்...திங்கள்......இன்னும் எத்தனை பெயர்கள்தான் கிடைக்குமோ? அப்படி என்ன நீ என்னைவிடப் பிரமாதமான அழகாயிருக்கிறாய்? அழுதுவடியும் உருண்டை முகம்; அதுவும் முழுவதுமாக வெண்மையாக இருப்பதில்லை. நடுநடுவே இருள் போன்றகண்ணுக்குப் புலப்படாத ஒருவகை நிழல். என்னைப்போன்ற கண்ணசைவாவது இருக்கிறதா? என்னைவிட அதிக உயரத்திலாவது உள்ளாயா?

இதோ என் காலடியில் இடக்கும் நீலக்கடலுமல்லவா நீ தோன்றியதும் உன்னை நோக்கி ஆர்ப்பரித்து முழங்குகிறது? என்றுமிருக்கும் என்னை மதிப்பதுமில்லையே! இதையெல்லாம் நான் என்னைப் போன்றிருப்பவர்களுக்கு எடுத்துச் சொல்லியும் கேளாக் காதினர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் வேண்டுமானால் இப்படித் தாழ்மையாகவே இருந்து மடியட்டும்...இன்று என்ன ஆனாலும் இந்த நிலவோடு போட்டியிட்டுத்தான் தீரவேண்டும்! வெற்றியடைந்துதான் ஆகவேண்டும்! நான் உயர்வா, அல்லது அது உயர்வா? இரண்டில் ஒன்று; அதன் முடிவு இன்று! இது உறுதி! இது உறுதி!!...ஐயோ!...இதென்ன இன்று திடீரென்று என் பாதை மாறுபடுகிறாப்போல் தோன்றுகிறதே! என் இயக்கம் வேறுபடுகிறாப்போல்தெரிகிறதே! ஐயோ!......கண் சுழலுகிறதே!...ஒன்றுமே தெரியவில்லையே!...நீலவானில் ஒளியே அற்றுப்போய் விட்டதா?...இதென்ன இவ்வளவு வேகமாகக் கீழ்நோக்கிப்போகிறேன்?...

ஆ! அந்நட்சத்திரம் என்ன அப்படிச் சிரிக்கிறது? என்றுமில்லாத தோற்றத்தையல்லவோ கொடுக்கிறது அதன் சிரிப்பு! இது எதில் முடியுமென்றே தெரியவில்லையே! மற்ற நட்சத்திரங்களுமல்லவா ஒரு கணம் தங்கள் இயக்கத்தையும் மறந்து அதையே உற்று நோக்குகின்றன!...அதோ திடீரென அதன் ஒளியில் ஒரு மாற்றம்! உடன் ஒளிப்பிழம்பொன்று விண்ணிலிருந்து மண்ணிற்கு விரைந்துவருவதுபோன்ற தோற்றம்! ஆனால் அதுவும் பின் தெரியாமல் நடுவிலேயே மறைந்தது.

நிலவோ எதையும் கவனியாததுபோல் தண்ணொளி பெருக்கிக் கொண்டிருந்தது. உதிர்ந்த அந்நட்சத்திரம் இல்லாத பொருள் போல் இல்லாமல் போயிற்று. பொல்லாத பொறாமையால் வானில் நில்லாது வீழ்ந்தது. உதிர்ந்த அந்நட்சத்திரத்தைப் பார்த்து இப்போது மற்ற நட்சத்திரங்கள் கண்சிமிட்டிச் சிரித்தன. நீலவானமோ அந்நட்சத்திரம் இருந்த இடத்தை தன்னுடைய தாக்கிக்கொண்டது.

அரசியல் வானிலும் இந்நிலைமை அவ்வப்போது காண முடிகிறதல்லவா?

*

# "இப்படியும் இருக்கிறார்கள்!!"

"என்னப்பா, காத்தமுத்து! எங்கே காலங்காத்தாலே, டாக்டர் வீட்டுக்கு வந்திருக்கே?"

"என் மவளுக்கு ஒரு ஏழெட்டு மாசமாவே உடம்பு சரியாயில்லே சாமி......திடீர் திடீர்னு கூச்சல் போடுது, ஆவேசம் வந்தமாதிரி குதிக்குது, அப்படியே மரம்போல நின்னு நின்னபடி சாயுது........ அதான் டாக்டர் இட்டே வந்திருக்கேன்"

"என்னப்பா! பேய் ஓட்டறதிலே பெரியவன்னு உன்னைப்பத்தி இந்தச் சுற்றுவட்டாரம் எல்லாம் சொல்லுது. போனமாசம் கூட, பொன்னுக்கோனார் பொஞ்சாதிக்குப் பேய் ஓட்டினேனன்னு சொன்னாங்க... அந்த வியாதிதானே உன் பொண்ணுக்கும்? ஏன், ஓட்டறது தானே!!"

"உங்ககிட்டே உண்மையைச் சொன்னா, என்னங்க. என்னமோ ஊர்லே நம்புறாங்க...அவுங்க நம்பிக்கைக்குத் தகுந்தபடி நடந்து இட்டு வந்திடுறேன். பிழைப்பும் நடக்குது. தலைவலியும் காய்ச்சலும் தனக்குவந்தாத்தானுங்களே தெரியும். உங்களைப்போல ஊரிலே நாலுபேரு பரிகாசம் செய்யத்தான் செய்வாங்க.........அதுக்காக பொண்ணு அலர்ற கண்றாவியைப் பெத்த அப்பன் எப்படிங்க பார்த்துக்கிட்டிருக்கமுடியும்? டாக்டர் இட்டேவந்தேன். என்னமோ, 'இஸ்டிரியா'ன்னாரு.....நாலுநாளா வர்ரேன்...கொஞ்சம் குணம் தெரியத்தான் தெரியுது"

*

"என்னங்கசார்! ஆற்றிலே வந்து குளிச்சிட்டுப் போறீங்களா......"

"ஆமாண்டா! ஸ்நானம் பண்ணிண்டு போறேன்...இன்னிக்கு கிரகணமோன்னோ......ஏண்டா, நேத்து "ஹோம் வொர்க்"கொடுத்தேனே, எல்லாம் முடிச்சிட்டியா........"

"அது முடிஞ்சிட்டுது சார்! ஒரு பெரிய சந்தேகம், சயன்சிலே..."

"என்ன சந்தேகம்! கேளுடா, இப்படி எந்தச் சந்தேகம் வந்தாலும், பயப்படாம கேட்கிற பசங்களைத்தான் நேக்குப் பிடிக்கும்... உன் ஆத்திலே நல்ல புடலங்காய் இருக்கா! மறந்துடாமே 'ஸ்கூலு'க்குப் போறப்ப ஒரு இரண்டு கொடுத்துட்டுப்போ.........ஆமா, என்ன சந்தேகம் நோக்கு"

## வண்டு

"அதாவது சார், சூரியனோட பாதையிலே சந்திரன் வர்றதாலே வெளிச்சம் மறையுது. பூமியிலே இருட்டுப்படுது. இதுதான் கிரகணம் ஏற்படக்காரணம்னு சொன்னீங்களே..."

"ஆமாம், யார் இல்லேன்னா!"

"இல்லே, ராகு ஆதவனைத் தீண்டறான்...அதான் காரணம்... அந்தத் தோஷம் கழியத்தான் தர்ப்பணம் பண்றதுன்னு அங்கே ஆற்றிலே பேசிக்கிட்டு இருந்ததைக் கேட்டேன். எது உண்மை? பள்ளிக்கூடத்திலே சொன்னதா- ஆற்றங்கரையிலே சொன்னதான்னு எனக்குச்சந்தேகம் வந்துடுச்சு, சார்..."

"பள்ளிக்கூடத்திலே சயன்ஸ்! வீட்டிலே, சாஸ்திரம்!! அது அங்கே. இது, இங்கே. இப்படி, எதெது எந்தெந்த இடத்துக்குப் பொருந்துமோ அதுபடி, 'அட்ஜஸ்' பண்ணிண்டு போகவேண்டியது தாண்டா......சாஸ்திரப்படி நடந்துக்கலேன்னா சொந்தக்காரா தூத்துவா. சயன்ஸிலேருக்கிறதைச் சொல்லித் தர்றேலேன்னா உத்தியோகத்துக்கு 'சீட்டு'கிழிச்சிடுவா, ஸ்கூல்லே..."

*

"வணக்கம்..."

"நமஸ்காரம்..."

"எங்கேருந்து வர்ரீங்க..."

"ஒரு பொதுக் கூட்டத்திலேருந்து வர்ரேன்..."

"என்ன பொதுக்கூட்டம்? மண்டலப் பிரசாரம்தானே...?"

"இல்லே! இப்ப, 'லேபர்விங்' இருக்கு பாருங்கோ — அதான் தொழிலாளர் சங்கம்—அதையெல்லாம், காங்கிரஸ் சார்பிலே கொண்டுவந்து விடுவதுன்னு இரகசியமா, ஒரு திட்டம் போட்டு வேலைசெய்றோம். அது சம்பந்தமாத்தான் போயிட்டு வர்ரேன்..."

"இது எத்தனை ஆண்டுத் திட்டம்? ஐந்தாண்டுத் திட்டமா, இல்லே, 'தேர்தல்வரை'த் திட்டமா!!"

"பார்த்தீங்களா, பார்த்தீங்களா நறுக்குன்னு, கேட்கிறீங்களே? தேர்தல்தானா, எங்களுக்கு இலட்சியம்? தொழிலாளர் நன்மையிலே எங்களுக்கு ஆர்வமில்லேன்னா நினைக்கிறீங்க. சேலை நெய்கிறான் தொழிலாளி! ஆலைஉருள்வது அவனாலே! அவன் வியர்வை சிந்தி உழைக்காவிட்டால், அரிசி ஏது, ஆடை ஏது, இரயில் ஏது, கார் ஏது..."

"ஏது ஏது! பெரிய பிரசங்கியா ஆயிட்டீங்க போலிருக்கே..."

"இன்னும் கேளுங்க! இயந்திரம் சுழல்வது அவனாலே......ராஜதந்திரி வாழ்வது அவனாலே...... தேசம் செழிப்பது அவனாலே... காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான். அவன் காணத் தகுந்தது வறுமையா? பூணத்தகுந்தது பொறுமையா!!"

"ஆகா! பாரதிதாசனைக்கூட இழுக்கிறீங்களே, பேச்சிலே..."

"கொஞ்சங்கொஞ்சமா இப்பத்தான இழுத்துக்கிட்டு வர்றோம்! அடுத்த தேர்தலுக்குள்ளே, 'குளோஸ்' பண்ணிடமாட்டோம்!"

"குளோஸ் பண்ணிடுவீங்களா? எதை! அவர் ஆர்வத்தையா! கவிதை வேகத்தையா!!"

"சேச்சே! நூல்களைப் படிச்சு முடிச்சுடுவோம்னு சொன்னேங்க......"

"ஆமாம்! போன மாசத்துக்கு முதல மாசம் நீங்க, மில் முதலாளிகள் சங்கத்திலேகூடப் பேசினதாகப் பத்திரிகையிலே பார்த்தேன்......"

"நிறையப் போட்டிருந்தாங்க முழுதும் படிச்சீங்களோ?"

"படிச்சேன், படிச்சேன்!"

"நாட்டிலே தொழில்வளம் பெருகணும்னு, என்ன செய்யணும்னு ஒரு 'ஐடியா' சொல்லியிருந்தேனே, கவனிச்சீங்களோ? யாரும் அந்தப் 'பாயிண்டை' இன்னும் 'டச்'பண்ணலே...நான்தான் பண்ணினேன் ......என்ன 'பாயிண்ட்' தெரியுங்களா?"

"தெரியலியே!"

"கதைகூடச் சொன்னேன் — அதாவது இராமராஜ்யத்திலே, புலியும் பசுவும் ஒரு துறையிலே இறங்கி, தண்ணி குடிக்குமாம். அதுபோலே, தொழிலாளிகளும் முதலாளிகளும் சமரசமா ஒண்ணா வாழணும்னு சொன்னேன்..."

"அப்படியா! ஆமாம் தொழிலாளர்கள் சங்கத்திலே நீங்க என்ன?"

"நான் தான் எல்லாம்! அவுங்களை இயக்கிற சக்தியே நான்தான் ...நான நில்லுன்னா நிப்பாங்க. விழுணும்னா விழுவாங்க..."

"அவ்வளவு செல்வாக்கு இருக்கா?"

"இதென்ன இப்படிக்கேட்டுட்டீங்க! அடுத்த மாசம் பாருங்க... ஐயா மில் முதலாளிகள் சங்கத்திலே ஒருபலமான இடத்தைப் பிடிச்சிடுவாரு...அப்ப இரண்டு சங்கமும் என்பையிலேதான் இருக்கும்...இந்தப்பையிலே முதலாளிகள் சங்க 'லெட்டர்பேட்'...இதிலே தொழிலாளிகள் சங்க நோட்டு... மாடல் சோஷியலிசத்துக்கு நடமாடும் 'மாடலா' நானே விளங்குவேன்...."

**கோவை: அக் 12-**

"இருபது இலட்ச ரூபாய்களைச் செலவழித்து தென்னிந்திய நெசவாலை ஆராய்ச்சிச் சங்கத்தார் கட்டியிருக்கும் இந்தக்கூடத்தைத் திறந்து வைக்கப்பெருமைப்படுகிறேன். இப்படியெல்லாம் ஆராய்ச்சிகள் பெருகப் பெருகத்தான், உற்பத்திச் செலவு குறையும்; நல்ல பொருள்களை நாம் தயாரிக்க முடியும். புதிய புதிய ஆராய்ச்சிகளை நாம் செய்து கொண்டேயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாடு நலம் பெறும்"

**சென்னை அக் 13**

"ஒன்றுமட்டும் சொல்வேன். இந்திய மாதர் சங்கத்தின் 41-வது மாநாட்டைத் துவக்கிவைக்கும் சமயத்தில் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். என்னதான் நாம் அணைக்கட்டுகளையும், பெரிய பெரிய ஆலைகளையும் அமைத்தாலும்சரி, அவையெல்லாம் வெளியழகுக்குத்தானே ஒழிய, உள்ளத்திலே அழகு உண்டாகவேண்டும். வெளியழகைவிட உள்ளத்து அழகு முக்கியமென்று சொல்வேன். அந்த அழகு ஏற்பட வேண்டுமானால் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் மதக்கல்வி இருக்க வேண்டும். அப்போதுதான், நம் நாடு முன்னேறும், பெருமை பெறும்."

இரண்டு இடத்திலும், இவ்வளவு முரண்பாடாகப் பேசிவிட்டு டில்லிக்குப் போய்விட்டார் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்! உலகம் போற்றும் மேதை — இந்திய துணைக்கண்டத்தின் துணைத் தலைவர்!!

❋

2-ம் பக்கத் தொடர்ச்சி

இடமாக (Market) அமையப் போவது தென்னாடு!

உர உற்பத்திப் பெருக்கத்திற்கு வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள்:

சிந்திரி உர உற்பத்தி 1956 ஆண்டு மார்ச் மாத இறுதிவரை முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 28 கோடி; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது ரூ. 7 கோடி; மொத்த முதலீடு ரூ. 35 கோடி.

நங்கல் உரஉற்பத்தி ஆலை ரூ 22 கோடி; ரூர்கலா உரஉற்பத்தி ஆலை ரூ. 8 கோடி. சிந்திரி; நங்கல்; ரூர்கலா உர உற்பத்தி ஆலைகளுக்கு ரூ. 65 கோடி செலவிடப்படுகிறது. தென்னகத்தில்? திட்டங்கள் இடம் பெறவில்லை. (இரண்டாவது ஐந்தாண்டு திட்டப் புத்தகம் பக்கம் 417 & 418) மூன்று இரும்பு எஃகு ஆலைகள் ரூ. 350 கோடி; தென்னாற்காடு பழுப்பு நிலக்கரி (நெய்வேலித் திட்டம்) ரூ. 52 கோடி; (56 கோடி 1951—56 வரை) (மொத்த மதிப்பீடு 68·85 கோடி) இந்துஸ்தான் கப்பற் கட்டுமிடம் ரூ. 6 கோடி; (1951—56 வரை செலவிடப்பட்டது) இரண்டாவது திட்டத்தில் 9·8 கோடி; கனரக மின்சாரக் கருவிகள் உற்பத்திக்கு ரூ. 20 கோடி எனப் பலவகைத் திட்டங்கள்.

தென்னகத்தில் நெய்வேலித் திட்டங்களுக்கு 1956 ஆண்டுவரை 5 கோடிதான் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் சிந்திரிக்கு செலவிடப்பட்டுள்ளது, ரூ. 28 கோடி.

"சிந்திரி தொழிற்சாலை சிறக்கிறது வடக்கே! முந்திரி தொழிற்சாலையும் சிதைகிறது தெற்கே!" என்று கூறினால் அடுக்குமொழி என்று கூறுவதால் ஏற்படும் பலன் என்ன? அடுக்குமொழிஎன்று கூறிடுவோர் அதில் உள்ள பொருளை உணரவேண்டாமா? பலன் காணும் திட்டங்கள் பல நூறு கோடிகளில் நிறைவேற்றப்படுகிறது வடக்கே! திட்டத்தின் வெற்றி வடக்கின் வெற்றி! திட்டத்தால் வியாபார இடமாக (Market Place) மாற்றப்படுகிறது தென்னகம். தென்னகத்தில் உருவாகும் திட்டங்களை எடுத்துச் சொல்லுங்கள்! அமைச்சர்கள் புள்ளி விவரங்களுடன் எடுத்துச் சொல்லட்டும், தமிழகத்திற்கு பயன்தரும் திட்டங்களை, அதில் காணும் வெற்றிகளை, திட்டங்களை எடுத்துச் சொல்லாமல் திட்டத்தின் வெற்றி! மக்களின் வெற்றி! என்று கூறுவது வீதிகளிலே கழைக்கூத்தாடி மந்திரத்தால் மாஞ்செடி வரவழைத்தல் போலாகும். மந்திரமல்ல மாஞ்செடி வருவது கழைக்கூத்தாடியின் தந்திரம் என்று அறிந்திடும் வரை கழைக்கூத்தாடிக்குவெற்றி! வாடும் மக்களுக்கு வருங்காலம் வளம் தரும் காலம் என்று கூறும் தந்திரத்திற்கு வேண்டுமானால் பயன்படும் இந்தத் திட்டத்தின் வெற்றி!!

★

# பதவியிலிருந்துகொண்டே!

காங்கிரசைக் காப்பாற்ற, ஒரு யோசனையை வெளியிட்டிருக்கிறார் பம்பாயின் இரும்பு மனிதர் என்று பாராட்டப்படும் எஸ். கே. பட்டீல்! இரண்டு மூன்றாண்டுகளுக்கு முன் வரை, பம்பாய் மாகாணக் காங்கிரஸ் தலைவர் அவர்; இப்போது டில்லி சர்க்காரில் ஒரு மந்திரி!! மந்திரிப் பதவி போன்றவைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் பெரிய தலைவர்கள், ராஜினாமா செய்துவிட்டுக் கட்சி வேலைகளில் ஈடுபட வேண்டுமாம் — அப்போதுதான் காங்கிரசைக் காப்பாற்ற முடியுமாம். பட்டீல், ஒரு மந்திரி! தன் பதவியை ராஜினாமாச் செய்து காட்டி — "இப்படிச் செய்யுங்கள், தோழர்காள்!" என்று கூறவில்லை. மந்திரிப் பதவியிலிருந்துகொண்டே, யோசனையைக் கூறுகிறார். அவரை 'ராஜினாமா' செய்ய வேண்டாமென்று, யார் கையைப் பிடித்துக்கொண்டார்களோ, காலில் விழுந்து கெஞ்சினார்களோ, யாமறியோம். தென் பம்பாய் காங்கிரஸ் தொண்டர்களைக் கூட்டி வைத்து இந்தப் போதனையைப் புரிந்திருக்கிறார்!!

தான் முதலில் செய்துகாட்டி, "பார்! பார்!! என்னைப்போல், நேருவும் பந்தும் காமராஜ-ம் மகதாப்பும் செய்யவில்லை. இப்படிப் பதவியாசையிருந்தால் எப்படி உருப்படும்?" என்று தொண்டர்கள் மத்தியில் துயரகீதம் எழுப்பியிருந்தாராயின், பாராட்டும் நாடு. நல்லோர் மெச்சுவர். பதவியிலிருந்துகொண்டே, தொண்டர்களிடம் போய், யோசனையை வழங்குகிறார். தொண்டர்களிடம் எங்கேயிருக்கிறது பதவி? பதவியில்லாததால்தானே தொண்டர்களாயிருக்கிறார்கள் அவர்கள்!

*

"பட்டீல் சொல்வதுதானா, காங்கிரசின் அழிவுக்குக் காரணம்?"

"இருக்கலாம் அப்படியும்!"

"செச்சே! இன்று காங்கிரஸ் பிழைப்பதே, பெரிய தலைவர்களாயிருப்பவர்கள், பெரிய பெரிய மந்திரிகளாயிருப்பதால்தான்"

"அது எப்படி?"

*

இந்தக் கிழமை செய்தியொன்று வந்திருக்கிறது ஏடுகளில்—விரைவில், கோபிச்செட்டிபாளையத்தில் கூடப்போகும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் அரசியல் மாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவராக

**அண்ணல்**

நிதியமைச்சர் சுப்ரமணியத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களாம். நல்ல பொறுப்பு — தமிழ்நாட்டு அரசியல் மாநாட்டையே நடத்துவிக்கும் பொறுப்பு அவர் வசம் விடப்பட்டிருக்கிறது. "என்னே, நான் பெற்ற பேறு! இதன்றோ என் தொண்டாற்றுந் திறனுக்கு வாழ்த்து. மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவேன். கட்சியை, அந்த வட்டாரத்தில், மாநாட்டு மூலம் கோட்டையாக்கிக் காட்டுவேன்" என்று அந்தக் கொங்கு நண்பர், தான் வகித்துவரும் பதவிகளைப் பட்டீலின் கூற்றுப்படி, இத்தனை நேரமும் துறந்திருக்கவேண்டும். செய்யவில்லை. செய்யவும் மாட்டார்.

ஏனெனில், அவர் 'நிதிமந்திரி'யாக இருக்கிறார் என்பதால்தான், இந்தப் பொறுப்பை அவர்வசம் விட்டிருக்கிறார்கள், காங்கிரஸ் கமிட்டியினர். அவர் அந்தப் பதவியிலிருப்பதால்தான், அடிக்கடி ஒவ்வொரு ஊருக்கும் கூப்பிடுகிறார்கள்—அவரும், 'சுற்றுப் பிரயாணம்' போட்டுக்கொண்டு அதிகாரிகள் சூழப்போகிறார். பொதுக் கூட்டங்களில் பேசுகிறார். அவர் 'நிதிமந்திரி'யாயிருப்பதால், மாநாடு கண்காட்சி அது இது என்றால், எதுவும், கிடைக்கும். அதனால்தான், தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். பட்டீலின் கூற்றுப்படி, அவர் தேசசேவையில் ஈடுபட்டால், அவரும் ஒரு தொண்டராயிருக்க முடியுமே தவிர, எப்படித் தலைவராக முடியும்?

*

"அப்படியானால், என்ன சொல்கிறாய்? மந்திரிப் பதவிகளில் இருப்பதால்தான் இவர்கள் எல்லாம் 'மவுசு' பெறுகிறார்கள் என்கிறாயா?"

"ஆமாம்! நிச்சயமாக, அப்படித்தான் கருதுகிறேன்"

"மந்திரிப்பதவி இல்லாவிட்டால், இவர்களால், தலைவராகவும் விளங்க முடியாது. ஊர்தோறும் போய்ச் சண்டப்பிரசண்டம் செய்யவும்மாட்டார்கள்?"

"அது எப்படி?"

*

எஸ். எஸ். இராமசாமி, அமைச்சராயிருந்தார் — நேற்றுவரையில்,

காங்கிரசை எதிர்த்துக் கட்சி நடத்தியவர் — மந்திரியானதும், பல ஊர் கமிட்டிகளை நடத்தினர், காங்கிரசை ஆரம்ப முதல் கட்டிக் காத்தவர்போலப் பேசினர் — எதிர்க்கட்சிகளுக்கு யோசனைகளைப் பொழிந்தார்-எத்தனையோ ஊர்க்காரர்கள் அவர் தலைமையில் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்களைக் கூட்டினர்கள். காங்கிரசுக்காகத் தடியடி பட்டவனும், 'உப்பு' அள்ளப் போய் உதைகளைப் பரிசாகப் பெற்றவனும், அவர் தலைமையில் கூடலாயினர். ஏன்? அன்று ஓர் மந்திரி! அதனல்!! அதைவிடப் பெரிய அதிசயம், டில்லியில் கூடிடும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு மந்திரி மாணிக்கவேலர் போய்வருகிறார் என்பது. 'அ. இ. கா. க.' என்பது, கட்சியின் மூளை மாதிரி. அந்த மூளைகளில் ஒருவராகும் 'பாக்கியம்' எப்படிக் கிடைத்தது மாணிக்கவேலருக்கு? எத்தனை ஊர்களில், மந்திரியாகுமுன், காங்கிரஸ் கமிட்டிகளை நிறுவினர் இவர்? எந்தெந்தச் சத்யாக்கிரகங்களில் ஈடுபட்டு அடியும் உதையும் வாங்கினர்? காங்கிரசில் மந்திரியாகச் சேர்வதற்கு முன்னாள் வரையிலும், அருமையான மல்லும் அழகான 'லங்காஷியரும்' போட்டுக்கொண்டிருந்தவர். மந்திரியானர்! 'மாபெரும்' தலைவர்களுடன் உட்காருகிறார் — அந்த மாபெரும் தலைவர்களும் இவருக்கும் சரி அந்தஸ்துத் தருகிறார்கள். ஏன்? இவர் ஒரு மந்திரி என்பதால்தான்!!

* * *

"மந்திரி என்பதால்தான், ஒவ்வொரு நகரக் காங்கிரஸ் கமிட்டியும் பலரைப் போற்றுகின்றன, என்கிறாயா?"

"போற்றுகின்றன என்பதற்குப் பதில், 'பயப்படுகின்றன' என்று சொல்லலாம்..."

"ஏன் பயப்படவேண்டும்? இவர்களைவிடத் தியாகம் செய்தவன், உடம்பை உருக்குலைத்தவன், வெள்ளையனையே விரட்டியவன், இவர்களுக்கா பயப்படுவான்?"

"ஏன் பயப்படமாட்டான்! நேருவும், பந்தும் இவர்களைக் கூப்பிட்டுத்தான் ஆலோசனைகள் செய்கின்றனர் — காங்கிரஸ் காரியக் கமிட்டியில் போய் சட்டம் செய்யக் கூடியவர்கள் எனும்போது, அச்சம் தானாக வந்துதானே சேரும்."

"இவர்கள் மந்திரிகளாயிருப்பதால்தான் மக்கள் மன்றத்துக்குப் போக முடிகிறது. காங்கிரஸ் கட்சிக்குள்ளும், செல்வாக்காக இருக்கமுடிகிறது. மேலிடத்திலும், மினுமினுப்புப் பெறமுடிகிறது."

"ஆமாம்!"

"ஏன்? இதே புகழை, இதே பொறுப்பை, இவர்கள் காங்கிரஸ் தொண்டர்களாகிப் பெற முடியாதா? காங்கிரசுக்காகப் பாடுபட்டு இவர்கள் தலைவர்களாக முடியாதா!!"

* * *

குறுக்கெழுத்துப் போட்டியில் இலட்சம் பத்தாயிரம்என்று சம்பாதிக்க நினைப்பவன், மண்வெட்டியைத் தோளில் தூக்கிக்கொண்டு போக முன்வரமாட்டானல்லவா? அதுபோல, 'குறுக்கு'வழியில் பதவியும் பவிசும் பெற மார்க்கம் எதுவென்பதை இன்றைய காங்கிரஸ் பலருக்குக் காட்டிவிட்டது! அதனலேயே, பிரபுக்களும், பெரிய பெரிய மிராசுதார்களும்,காங்கிரஸ் கோட்டைக்குள் வலம் வருகின்றனர். அவர்களுக்கு மிக எளிதில் எம். எல். ஏ., எம். பி. போன்றவைகள் கிடைத்துவிடுகின்றன. அப்படிப் பணக்காரர்களின் உறவு இருந்தால்தான், தேர்தல்களில், இலட்சக் கணக்கில் பணத்தைச் செலவிடமுடியும் என்று கருதுவதால், காங்கிரஸ் தலைவர்கள் — அதாவது தலைவர்களாயிருக்கிற மந்திரிகள் — அவர்களை நாடுகிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் யாரார் வசதி படைத்தவர்களோ, அவர்களையெல்லாம் காங்கிரஸ் முகாமுக்குள் கொண்டுவரவேண்டுமென்று துடிக்கிறார்கள் மந்திரிகள். அப்போதுதானே, தேர்தலுக்குப் பணம் புரளும் — வெற்றிபெற முடியும் — வெண்சாமரம் தாங்கிகளாக வீற்றிருக்க முடியும்.

* * *

"நெடும்பலமா! சார், இந்தத் தடவை 'பெரியவர்' உங்க வீட்டிலேதான் வந்து தங்கப்போறதாக எழுதியிருக்கார்..."

"அப்படியா? அடியேன் செய்த பாக்கியம்தான்! வரட்டும்... ஓய், பிரமாதமா விருந்து வைக்கிறேனய்யா..."

"விருந்துக்குச் சுற்றுவட்டாரத்திலிருக்கிற எல்லாப் பணக்காரர்களையும் சாப்பிட வேண்டுங்க..."

* * *

தொண்டர்தம்பணி, இப்படியாகிவிட்டது. தூதுபோதல், ஆள் சேர்த்தல், பராக்குக் கூறுதலே, காங்கிரஸ்தொண்டர்களின் வேலையென்றாகிவிட்டது — இப்படி 'வேலை' செய்யாமல் காந்தியடிகளையும், பழைய நாள் காங்கிரசையும் நினைத்துக்கொண்டு கிடப்பவர்களோ, நொந்து நொந்து சாகிறார்கள். ஆள்பிடிக்கும் பணியிலீடுபடுபவர்களோ, அமைச்சர்களோ, பணமூட்டைகளை, நாடுகின்றனர். பணமூட்டைகளோ, இப்படிப் பட்டவர்களை அமைச்சர்களாக வைத்திருப்பதன் மூலம் 'பலம்' பெறலாம் என எண்ணுகின்றனர். இப்படி, ஒருவருக்கொருவர் தொடர்புகொண்டு வாழவேண்டிய கட்டத்தில் நாடு உள்ளது. இது, தெரியும், எஸ். கே. பட்டிலுக்கு. எனினும் பெரிய தலைவர்கள் பதவிலிருப்பதால்தான் காங்கிரஸ் வேலை நடக்கவில்லையென்கிறார்! அதுவும் பதவியிலிருந்துகொண்டே சொல்கிறார்!!

★

எங்கு அறியாமை இல்லையோ, எங்கு ஆண் பெண் வேற்றுமை இல்லையோ, எங்கு வேலையில்லாத் திண்டாட்டம் இல்லையோ, எங்கு பட்டினியும் பஞ்சமும் இல்லையோ, எங்கு வைதீகமும் முதலாளித்துவமும் இல்லையோ, எங்கு சுயநலமும் சுரண்டலும் இல்லையோ, எங்கு ஆதிக்க வெறி இல்லையோ, அங்குதான் சமுதாயத்திலுள்ள புன்மைகளும் புரட்டுகளும் பீடைகளும் இல்லாமல் ஒழியும், அங்கேதான் நிச்சயமாக நல்லதொரு சமுதாயம் ஏற்பட முடியும்.